# دليل العمرة
# وزيارة المدينة المنورة

# உம்ரா
# வழிமுறைகளும்,
# மதீனா முனவ்வரா
# ஜியாரத்தும்

தொகுப்பு

**தீன் ஹஜ் உலமா குழு**



# உள்ளே

## உம்ரா வழி முறைகள்


| | | |
|---|---|---|
| 1 | உம்ராவுக்கு செல்வோம் | 4 |
| 2 | வீட்டிலிருந்து புறப்படும் போது | 7 |
| 3 | பிறரை வழியனுப்பும் போது | 8 |
| 4 | விமானப் பயண துஆ | 9 |
| 5 | இஃராமுடைய நிய்யத்து | 10 |
| 6 | ஹரம் எல்லையில் நுழையும் போது | 11 |
| 7 | மக்கா நகரில் நுழையும் போது | 13 |
| 8 | மஸ்ஜித் ஹராமில் நுழையும் போது | 13 |
| 9 | கஃபாவை பார்த்தவுடன் | 15 |
| 10 | தவாஃபின் நிய்யத்து | 17 |
| 11 | தவாஃபின் துஆக்கள் -7 சுற்றுக்கள் | 18 |
| 12 | ருக்னயமானி - ஹஜருல் அஸ்வத் வரை | 31 |
| 13 | முல்தஜிம் துஆ | 32 |
| 14 | மகாமே இப்ராஹிம் துஆ | 35 |
| 15 | மீஜாபே ரஹ்மத் துஆ | 38 |
| 16 | ஜம்ஜம் துஆ | 41 |
| 17 | ஸயீயின் நிய்யத்து | 41 |

| | | |
|---|---|---|
| 18 | ஸயீ உடைய துஆக்கள் -7 சுற்றுக்கள் | 44 |
| 19 | ஸயீயிக்குப் பின் மர்வாவில் துஆ | 74 |
| | ***மதினா ஜியாரத்து*** | |
| 20 | மதீனாவில் நுழையும் போது | 76 |
| 21 | மஸ்ஜிதுந் நபவீயில் நுழையும் போது | 76 |
| 22 | நபி ஸல் அவர்களுக்கு ஸலாம் கூறுதல் | 77 |
| 23 | அபூபக்கர் ரளி அவர்களுக்கு ஸலாம் | 80 |
| 24 | உமர் ரளி அவர்களுக்கு ஸலாம் | 81 |
| 25 | பிறருடைய ஸலாமை எத்தி வைத்தல் | 84 |
| 26 | ரவ்ளாவில் கேட்கும் துஆ | 84 |
| 27 | ஜன்னதுல் பகீயில் நுழையும் போது | 87 |
| 28 | உஸ்மான் ரளி அவர்களுக்கு ஸலாம் | 88 |
| 29 | ஜன்னதுல் பகீஇல் துஆ | 90 |
| 30 | ரவ்ளாவில் இறுதி துஆ | 94 |
| 31 | சலவாத்துக்கள் | 97 |
| 32 | மஸ்ஜிதுந் நபவீயை விட்டும் வெளியேறும் போது | 99 |
| 33 | ஹம்ஜா ரளி மற்றும் உஹது ஷுஹதாக்களுக்கு ஸலாம் | 100 |

பிஸ்மிஹீ தஆலா

# உம்ராவுக்கு செல்வோம்

புகழனைத்தும் வல்ல இறைவனுக்கே! அவனே நம்மை படைத்துள்ளான். அனைவரும் அவன் அளவில் மீள வேண்டியுள்ளது. அவனுடைய தூதர் ரஹ்மதுல்லில் ஆலமீன் நம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்களான சத்திய சஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்கள் அனைவரின் மீதும் இறைவனின் சாந்தி நிலவட்டுமாக!

வல்ல இறைவன் இவ்வுலகைப் படைத்து அதில் மனிதர்களை வாழச் செய்து அவர்களுக்கு பல அத்தாட்சிகளையும் அளித்துள்ளான். அவர்கள், அவற்றை காணும் போது தான் படைக்கப்பட்ட நோக்கத்தை அறிந்து கொண்டு செயல்படும் விதமாக அவை அமைந்துள்ளன. இறைவன் அளித்துள்ள அத்தாட்சிகளில் மாபெரும் அத்தாட்சி மற்றும் வரலாற்று சின்னமாக மக்காவில் அமைந்துள்ள கஃபா என்னும் இறை இல்லம் உள்ளது.

இறைவனை வணங்க வேண்டும் என்பதற்காக உலகில் முதல் முதலாக கட்டப்பட்ட இறை இல்லம்

www.DheenHajService.com

இதுதான். இறைவனின் நண்பர் என்று அழைக்கப்பட்ட நபி இப்ராஹீம் (அலை) அவர்களால் மீண்டும் புதுப்பித்து கட்டப்பட்ட இறை இல்லம் இதுதான். அவர்களின் பிராத்தனையின் காரணமாக இன்று வரை இறைவன் அந்த இல்லத்தில் தன் அருளைப் பொழிந்து கொண்டிருக்கிறான். அந்த இறை இல்லம் மட்டும் அல்லாது அதன் சுற்றுப்புறம் அனைத்தையும் உள்ளடக்கி மனிதர்களுக்கு அபயம் அளிக்கும் இடமாக இறைவன் அதை ஆக்கியுள்ளான். அங்கு எவ்வித அனாச்சாரங்களும், அக்கிரமங்களும் நடக்காது. உலகிலேயே அமைதியின் இருப்பிடமாக இது அமைந்துள்ளது. உலகில் வேறு எந்த நகரமும் உயிரினங்களுக்கு இது போன்று அபயம் அளிப்பதாக இன்று வரை அமைந்திருக்கவில்லை.

முஸ்லிமாக பிறந்துள்ள ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில் மக்கா மாநகர் சென்று வரும் அளவிற்கு செல்வத்தையும் உடல் வலிமையையும் பெற்று விடுவாராயின் அவர் அவசியம் அங்கு சென்று ஹஜ் என்னும் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையை செய்தாக வேண்டும் என்று இஸ்லாம் அவருக்கு கட்டளையிடுகிறது.

மேலும் பர்ளான தொழுகைகளை நிறைவேற்றும் நாம் மேல் மிச்சமான சுன்னத் நபிலான தொழுகைகளை நிறைவேற்றி இறை நெருக்கத்தை பெறுவது போல பர்ளான ஹஜ்ஜை நிறைவேற்றியவர்கள் நபிலான உம்ரா பயணம் மேற் கொள்வது இறை நெருக்கம் பெற வழியாகும்.

அது போல ஹஜ் செய்யும் அளவு வசதியும் பொருளாதாரமும் இல்லாதவர்கள் உம்ரா பயணம் செய்து திருக்கஃபாவைக் கண்டு களிக்கும் பெரும் பாக்கியத்தையும் திரு நபி (ஸல்) அவர்களின் ரவ்ழா முன் நின்று சலாம் சொல்லும் அரிய வாய்ப்பினையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

அல்லாஹுத்தஆலா திருமறையில் கூறுகிறான் "அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜையும் உம்ராவையும் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள்." (2:196)

நபி (ஸல்) கூறினார்கள் "ஹஜ்ஜையும், உம்ராவையும் தொடர்படியாக செய்யுங்கள். நிச்சயமாக அவை வறுமையையும் பாவங்களையும் நீக்கி விடுகிறது. பாதரசம் இரும்பு, தங்கம், வெள்ளியின் அழுக்குகளை நீக்குவது போல"

(*திர்மிதி, நஸயீ*)

நபி (ஸல்) கூறினார்கள் ஹஜ் செய்பவரும், உம்ரா செய்பவரும் அல்லாஹ்வுடைய சேனை -

படையினராகும். அவர்கள் எதைக் கேட்டாலும் அதை கொடுப்பான். அவர்கள் பாவமன்னிப்பு தேடினால் மன்னித்து விடுவான். (*இப்னு மாஜா*) வல்ல ரஹ்மான் நம் அனைவருக்கும் உம்ரா செய்யக்கூடிய பாக்கியத்தை ஏற்படுத்தி தருவானாக! ஆமீன்.

## வீட்டிலிருந்து புறப்படும் போது

بِسْمِ اللَّهِ تَوَكَّلْتُ عَلَى اللهِ لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ أَنْ أَضِلَّ أَوْ أُضَلَّ أَوْ أَزِلَّ أَوْ أُزَلَّ

أَوْ أَظْلِمَ أَوْ أُظْلَمَ أَوْ أَجْهَلَ أَوْ يُجْهَلَ عَلَيَّ

அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு பிரயாணம் செய்கிறேன். அவன் மீதே நம்பிக்கை கொண்டேன். நன்மை செய்ய சக்தியுமில்லை, தீமைகளை விட்டு தப்பவும் முடியாது அல்லாஹ்வுடைய உதவியை கொண்டே தவிர

யா அல்லாஹ்! நான் வழி கெடுவதை விட்டும், பிறரால் வழி கெடுக்கப்படுவதை விட்டும், நான் சருகுவதை விட்டும், பிறரால் சருகப்படுவதை

விட்டும் நான் அநீதம் செய்வதை விட்டும், பிறரால் அநீதம் செய்யப்படுவதை விட்டும், நான் அறியாமல் ஆவதை விட்டும், பிறரால் அறியாமல் ஆக்கப்படுவதை விட்டும் உன்னிடத்திலே பாதுகாப்பு தேடுகிறேன்.

## பிறரை வழியனுப்பும் போது

أَسْتَوْدِعُ اللّٰهَ دِينَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيمَ عَمَلِكَ

زَوَّدَكَ اللّٰهُ التَّقْوٰى وَغَفَرَ ذَنْبَكَ وَيَسَّرَ لَكَ الْخَيْرَ

حَيْثُمَا كُنْتَ

**பொருள்** - உன்னுடைய தீனிற்கும், உன் பாதுகாப்பிற்கும், உன்னுடைய அமலின் நல்ல முடிவிற்கும் அல்லாஹ்வை நான் பாதுகாப்பாக ஆக்குகிறேன். அல்லாஹ் உனக்கு தக்வாவை கட்டுச் சாதமாக ஆக்கித்தந்து நீ எங்கிருந்தாலும் நன்மையை உனக்கு இலேசாக்கித் தருவானாக.

www.DheenHajService.com

## விமான பயண துஆ

سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِيْنَ

وَإِنَّا إِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ اَللّٰهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِى

سَفَرِنَا هٰذَا اَلْبِرَّ وَالتَّقْوٰى وَمِنَ الْعَمَلِ مَا تَرْضٰى

اَللّٰهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هٰذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ

اَللّٰهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِى السَّفَرِ وَالْخَلِيفَةُ فِى

الأَهْلِ اَللّٰهُمَّ إِنِّى أَعُوْذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ

وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوْءِ الْمُنْقَلَبِ فِى الْمَالِ وَالأَهْلِ

**பொருள்** - இந்த வாகனத்தை நமக்கு வசப்படுத்திக் கொடுத்த அல்லாஹ் மிக பரிசுத்தமானவன். உண்மையில் நாம் இந்த வாகனத்தை வசப்படுத்தக்கூடியவர்கள் அல்ல, நிச்சயமாக நாம் நம்முடைய ரப்பின் பக்கம் மீளக்கூடியவர்களாக இருக்கிறோம்.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் இந்த எங்களது பிரயாணத்திலே நன்மையையும், இறையச்சத்தையும் கேட்கின்றோம். நீ பொருந்திக் கொண்ட நல் அமல்களை செய்வதையும் கேட்கிறோம். யா அல்லாஹ்! எங்கள் பிரயாணத்தை இலேசாக்குவாயாக! எமது பிரயாணத்தின் தூரத்தை சுருக்கித் தருவாயாக!

யா அல்லாஹ்! நீயே பிரயாணத்திலே கூட்டாளியானவன் மேலும் எனது குடும்பத்திலே எனக்கு பிரதிநிதியாக இருந்து காப்பவன்.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் பிரயாணத்தின் சிரமங்களை விட்டும், கண்ணோறின் தீங்கை விட்டும், என்னுடைய பொருள் இன்னும் குடும்பத்திலே எனக்குப் பிறகு தீய மாறுதல் ஏற்படுவதை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்பு தேடுகிறேன்.,

## உம்ராவுடைய இஹ்ராமின் நிய்யத்து...

اَللّٰهُمَّ إِنِّيْ أُرِيْدُ الْعُمْرَةَ فَيَسِّرْهَا لِيْ وَتَقَبَّلْهَا مِنِّيْ

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உம்ராச் செய்ய நாடுகிறேன். எனக்கு இதனை இலேசாக்கி வைத்து, என்னிடமிருந்து இதனை ஏற்றுக் கொள்வாயாக!

www.DheenHajService.com

## தல்பியா

لَبَّيْكَ. اَللّٰهُمَّ لَبَّيْكَ.

لَبَّيْكَ لَا شَرِيْكَ لَك لَبَّيْكَ.

إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكُ. لَا شَرِيْكَ لَكَ

இதோ, நான் வருகை தந்துள்ளேன்.

யா அல்லாஹ்! இதோ, நான் வருகை தந்துள்ளேன். நான் வருகை தந்துள்ளேன். உனக்கு யாதோர் இணையுமில்லை. இதோ, நான் வருகை தந்துள்ளேன்.

நிச்சயமாக புகழனைத்தும், பாக்கியமனைத்தும் உனக்கே சொந்தம். ஆட்சியனைத்தும் உனக்கே! உனக்கு யாதோர் இணையுமில்லை.

www.DheenHajService.com

## ஹரம் எல்லையில் நுழையும் போது...

اَللّٰهُمَّ إِنَّ هٰذَا حَرَمُكَ وَ حَرَمُ رَسُوْلِكَ فَحَرِّمْ

لَحْمِيْ وَدَمِيْ وَعَظْمِيْ وَبَشَرِيْ عَلَى النَّارِ اَللّٰهُمَّ

اٰمِنِّيْ مِنْ عَذَابِكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ وَاجْعَلْنِيْ

مِنْ اَوْلِيَائِكَ وَاَهْلِ طَاعَتِكَ وَتُبْ عَلَيَّ اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ

யா அல்லாஹ்! நிச்சயமாக இது உன்னுடைய புண்ணிய பூமியும், உன் தூதரின் புண்ணிய பூமியுமாகும். ஆகையால், என்னுடைய சதையையும், என் இரத்தத்தையும், என் எழும்பையும், என் மேனியையும் நரக நெருப்பின் மீது ஹராமாக்கி வைத்து விடுவாயாக.

யா அல்லாஹ்! உன்னுடைய அடியார்களை உயிர் கொடுத்து எழுப்புகின்ற நாளில் உன்னுடைய வேதனையை விட்டும் என்னை நீ காப்பாற்று வாயாக. இன்னும், என்னை உன்னுடைய நேசர்களில் உள்ளவனாகவும் ஆக்கியருள்வாயாக. என்னுடைய தௌபாவை ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீ தௌபாவை ஏற்றுக் கொள்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறாய்.

www.DheenHajService.com

## மக்கா நகரில் நுழையும் போது...

اَللّٰهُمَّ اجْعَلْ لِيْ بِهَا قَرَارًا وَارْزُقْنِيْ فِيْهَا رِزْقًا

حَلَالًا اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْهَا اَللّٰهُمَّ ارْزُقْنَا جَنَاهَا

وَحَبِّبْنَا إِلٰى أَهْلِهَا ، وَحَبِّبْ صَالِحِيْ أَهْلِهَا إِلَيْنَا

யா அல்லாஹ்! எனக்கு இங்கு உறுதிப்பாட்டை ஏற்படுத்துவாயாக. இதில் எனக்கு ஹலாலான உணவை வழங்குவாயாக. யா அல்லாஹ்! இதில் எங்களுக்கு பரகத் செய்வாயாக. யா அல்லாஹ்! இவ்வூரின் கனிகளை எங்களுக்கு வழங்கிடு வாயாக! இவ்வூராருக்கு எங்களை பிரியமாக்கி வைப்பாயாக! இவ்வூரின் நல்லடியார்களை எங்களுக்கு பிரியமாக்கி வைப்பாயாக.

## பாபுஸ் ஸலாம் வழியாக ஹரமில் நுழையும் போது ...

اَللّٰهُمَّ أَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّلَامُ وَإِلَيْكَ يَرْجِعُ

السَّلَامُ فَحَيِّنَا رَبَّنَا بِالسَّلَامِ وَاَدْخِلْنَا دَارَ

www.DheenHajService.com

السَّلَامِ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ يَا ذَالْجَلَالِ
وَالْإِكْرَامِ اَللّٰهُمَّ زِدْ بَيْتَكَ هٰذَا تَعْظِيْمًا وَتَشْرِيْفًا
وَمَهَابَةً وَزِدْ مِنْ تَعْظِيْمِهِ وَتَشْرِيْفِهِ مِنْ حَجَّةٍ
وَعُمْرَةٍ تَعْظِيْمًا وَتَشْرِيْفًا وَمَهَابَةً اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ
ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

யா அல்லாஹ்! நீ சாந்தியானவன்; சாந்தியாகிறது உன்னிலிருந்து உள்ளது தான். உன் பக்கமே சாந்தி மீளும். எங்கள் இரட்சகனே! சாந்தியுடன் எங்களை வாழச் செய்வாயாக. சாந்தியின் வீட்டினில் எங்களை நுழையச் செய்வாயாக! நீ பரகத் பொருந்தியவனாக இருக்கிறாய். எங்கள் இரட்சகனே நீ உயர்வுடையவனாக இருக்கிறாய். மாண்பும் சங்கையும் உடையவனே!

யா அல்லாஹ்! உன்னுடைய இந்த வீட்டிற்கு மகத்துவத்தையும் சிறப்பையும் அச்சத்தையும் அதிகப்படுத்துவாயாக! ஹஜ், உம்ராவின் காரணத்தால் இதன் மகத்துவத்தையும், சிறப்பையும் மேலும் அதிகப்படுத்துவாயாக.

www.DheenHajService.com

யா அல்லாஹ்!! என் பாவங்களை மன்னித்து உன்னுடைய அருள் வாசல்களை எனக்கு திறந்து விடுவாயாக.

## கஃபாவை பார்த்தவுடன்...

اَللّٰهُمَّ زِدْ هٰذَا الْبَيْتَ تَشْرِيْفًا وَتَعْظِيْمًا وَتَكْرِيْمًا

وَبِرًّا وَمَهَابَةً وَزِدْ مَنْ شَرَّفَهُ وَكَرَّمَهُ مِمَّنْ حَجَّهُ أَوِ

اعْتَمَرَهُ تَشْرِيْفًا وَتَكْرِيْمًا وَبِرًّا اَللّٰهُمَّ إِنَّكَ دَعَوْتَ

عِبَادَكَ إِلٰى بَيْتِكَ الْحَرَامِ وَقَدْ جِئْتُ طَالِبًا رَحْمَتَكَ

مُتَّبِعًا مَرْضَاتِكَ وَأَنْتَ مَنَنْتَ عَلَيَّ بِذٰلِكَ فَاغْفِرْ لِيْ

وَارْحَمْنِيْ إِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ. وَلِكُلِّ زَائِرٍ

حَقٌّ عَلٰى مَزُوْرٍ وَاَنْتَ خَيْرُ مَزُوْرٍ فَاَسْئَلُكَ اَنْ تَغْفِرَ

لِيْ وَتَرْحَمَنِيْ وَتَفُكَّ رَقَبَتِيْ مِنَ النَّارِ اَللّٰهُمَّ اِنِّيْ

www.Dheenhajservice.com

اَسْئَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ وَالْمُعَافَاةَ الدَّائِمَةَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْآخِرَةِ وَالْفَوْزَ فِي الْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ

யா அல்லாஹ்! இப்புனித இல்லத்திற்கு மகத்துவத்தையும், சிறப்பையும், கண்ணியத்தையும், அச்சத்தையும் அதிகப்படுத்துவாயாக! இதனை ஹஜ்ஜு செய்து, உம்ரா செய்து சிறப்பாக்கி கண்ணியம் செய்தவருக்கு சிறப்பையும், கண்ணியத்தையும், நன்மையையும் அதிகப்படுத்துவாயாக.

யா அல்லாஹ்! நீ உன் அடியார்களை உன் புனித வீட்டிற்கு அழைத்தாய். நான் உன் திருப்பொருத்தத்தை நாடியவனாக வந்துள்ளேன். இதன் மூலம் நீ என் மீது பேரருள் புரிந்து விட்டாய். எனவே, நீ என்னை மன்னித்து எனக்கு அருள் புரிவாயாக. என்னை விட்டும் என் பாவங்களை அழித்து விடுவாயாக. நிச்சயமாக நீ எல்லா பொருள்களின் மீதும் சக்தி பெற்றவன்.

யா அல்லாஹ்! நான் உன்னுடைய அடிமை. உன்னை சந்திக்க வந்திருக்கிறேன். சந்திக்கிற ஒவ்வொருவரையும் சந்திக்கப்படுபவர் கண்ணி



www.Dheenhajservice.com

யப்படுத்துவது கடமையாகும். நீ சந்திக்கப் படுகிறவர்களில் மிகச் சிறந்தவன். எனவே, நீ என்னை மன்னித்து அருள்புரிய வேண்டுமென்றும், என் பிடறியை நீ நரகத்திலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் நான் உன்னிடம் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் மன்னிப்பையும் சுகத்தையும் தீனிலும் துன்யா விலும், மறுமையில் நிரந்தரமான நலத்தையும், சுவர்கத்தைக் கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டு ஈடேற்றத்தையும் வேண்டுகிறேன்.

## உம்ராவுடைய தவாபின் நிய்யத்து

اَللّٰهُمَّ إِنِّيْ أُرِيْدُ طَوَافَ الْعُمْرَةِ سَبْعَةَ اَشْوَاطٍ لِلّٰهِ تَعَالٰى فَيَسِّرْهَا لِيْ وَتَقَبَّلْهَا مِنِّيْ.

யா அல்லாஹ்! (புனிதமான உன் வீட்டை) அல்லாஹ்வுக்காக ஏழு சுற்றுக்கள் உம்ராவுடைய தவாஃபாக செய்ய விரும்புகிறேன். எனவே, இதனை எனக்கு இலகுவாக்கி, என்னிடமிருந்து இதை ஏற்றுக் கொள்வாயாக.

www.DheenHajService.com

**நிய்யத்து செய்த பின் ஹஜ்ருல் அஸ்வதுக்கு முன்னால் நின்று, கைகளை உயர்த்தி பின் வரும் தக்பீரைக் கூறவேண்டும்.**

بِسْمِ اللهِ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

அல்லாஹ்வின் திருநாமத்தால்.. அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

## தவாஃபின் துஆக்கள்

### *முதல் சுற்றில்*

★ 1

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا إِلٰهَ إِلَّا اللهُ وَاللهُ أَكْبَرُ لَاحَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.

اَللّٰهُمَّ إِيْمَانًا بِكَ وَتَصْدِيْقًا بِكِتَابِكَ وَوَفَاءً

بِعَهْدِكَ وَاتِّبَاعًا لِسُنَّةِ نَبِيِّكَ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ. اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ
وَالْمُعَافَاةَ الدَّآئِمَةَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْآخِرَةِ
وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ

அல்லாஹ் மகா பரிசுத்தமானவன், எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே. வணக்கத்திற் குறியவன் அல்லாஹ் வைத் தவிர வேறுயாரும் இல்லை. அல்லாஹ் மிகப் பெரியவன். பாவத்தை விட்டு திரும்புதலும், நன்மை செய்ய சக்தியும் உயர்வான, மகத்தான அல்லாஹ்வின் உதவியைக் கொண்டே தவிர இல்லை. சலவாத்தும் ஸலாமும் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது உண்டாவதாக. யா அல்லாஹ்! உன்னைக் கொண்டு ஈமான் கொண்டதற்காக, உன் வேதத்தை உண்மை படுத்தியதற்காக, உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, உனது ஹபீபாகிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழிமுறை பின்பற்றி (இந்த தவாபை நிறைவேற்றுகிறேன்.)

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் மன்னிப்பையும் சுகத்தையும் தீனிலும் துன்யாவிலும், மறுமையிலும் நிரந்தரமான நலவையும் சுவனத்தை கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டு ஈடேற்றத்தையும் வேண்டுகிறேன்.

## இரண்டாம் சுற்றில்

★★ 2

اَللّٰهُمَّ إِنَّ هٰذَا الْبَيْتَ بَيْتُكَ وَالْحَرَمَ حَرَمُكَ وَالْأَمْنَ أَمْنُكَ وَالْعَبْدَ عَبْدُكَ وَاَنَا عَبْدُكَ وَ اِبْنُ عَبْدِكَ وَهٰذَا مَقَامُ الْعَائِذِ بِكَ مِنْ النَّارِ وَحَرِّمْ لُحُوْمَنَا وَبَشَرَتَنَا عَلَى النَّارِ اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْإِيمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ اَللّٰهُمَّ قِنِىْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ اَللّٰهُمَّ ارْزُقْنِيْ اَلْجَنَّةَ بِغَيْرِ حِسَابٍ.

www.DheenHajservice.com

யா அல்லாஹ்! நிச்சயமாக இந்த வீடு உன்னுடைய வீடு. இப்புனித பூமி உன்னுடைய புனித பூமி. பாதுகாப்பு என்பது உன்னுடைய பாதுகாப்புதான். அடிமையும் உன்னுடைய அடிமை தான். நானோ உன்னுடைய அடிமையாகவும், உன் அடிமையின் மகனாகவும் இருக்கிறேன். இது உன்னிடம் நரகத்தை விட்டும் பாதுகாப்பு தேடுகின்ற இடமாகும். எனவே, எங்களுடைய சதைகளையும், மேனிகளையும் நரகத்தின் மீது ஹராமாக்கி வைப்பாயாக.

யா அல்லாஹ்! ஈமானை எங்களுக்கு பிரியமானதாக ஆக்கிவைத்து, அதனை எங்களின் இதயங்களில் அழகுபடுத்தி வைப்பாயாக. குப்ரையும், பாவத்தையும், மாறு செய்வதையும் எங்களுக்கு வெறுப்பாக்கி வைத்து, எங்களை நேர்வழியாளர்களில் உள்ளவர்களாக ஆக்கிவிடுவாயாக.

யா அல்லாஹ்! நீ உன்னுடைய அடியார்களை உயிர் கொடுத்து எழுப்பும் நாளில் உன் வேதனையை விட்டும் என்னை நீ காப்பாற்று வாயாக. யா அல்லாஹ்! கேள்வி கணக்கின்றி சுவர்க்கத்தை எனக்கு நீ தந்தருள்வாயாக.

www.DheenHajService.com

## மூன்றாம் சுற்றில்

★★★ 3

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الشَّكِّ وَالشِّرْكِ
وَالشِّقَاقِ وَالنِّفَاقِ وَسُوْءِ الْأَخْلَاقِ وَسُوْءِ الْمَنْظَرِ
وَالْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ وَالْوَلَدِ اَللّٰهُمَّ إِنِّيْ
أَسْأَلُكَ رِضَاكَ وَالْجَنَّةَ وَأَعُوْذُ بِكَ مِنْ سَخَطِكَ
وَالنَّارِ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الْقَبْرِ وَأَعُوْذُ
بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் சந்தேகம், இணைவைத்தல், பிளவுபடுத்துதல், நயவஞ்சகம், தீய குணங்கள், பொருளிலும், குடும்பத்திலும், பிள்ளைகளிலும் தீய தோற்றம், தீய திரும்புதல் ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னுடைய பொருத்தத்தையும், சொர்கத்தையும் உன்னிடம்

www.DheenHajService.com

வேண்டுகிறேன். உன்னுடைய கோபத்தை விட்டும் நரகத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் கப்ருகளின் குழப்பத்தை விட்டும், வாழ்வின் குழப்பத்தை விட்டும், மரணத்தின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.

## *நான்காம் சுற்றில்*

| ★★ ★★ | 4 |
|---|---|

اَللّٰهُمَّ اجْعَلْهُ حَجًّا مَبْرُوْرًا وَسَعْيًا مَشْكُوْرًا وَذَنْبًا
مَغْفُوْرًا وَعَمَلًا صَالِحًا مَقْبُوْلًا وَتِجَارَةً لَنْ تَبُوْرَ يَا
عَالِمَ مَا فِي الصُّدُوْرِ اَخْرِجْنِيْ يَا اَللّٰهُ مِنَ الظُّلُمَاتِ
اِلَى النُّوْرِ اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ
وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالسَّلَامَةَ مِنْ كُلِّ إِثْمٍ
وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالْفَوْزَ بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ

www.DheenHajService.com

النَّارِ رَبِّ قَنِّعْنِيْ بِمَا رَزَقْتَنِيْ وَبَارِكْ لِيْ فِيْمَا

اَعْطَيْتَنِيْ وَاخْلُفْ عَلٰى كُلِّ غَائِبَةٍ لِّيْ مِنْكَ بِخَيْرٍ

யா அல்லாஹ்! இதனை ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாகவும் நன்றி செலுத்தப்பட்ட முயற்சியாகவும், மன்னிக்கப்பட்ட பாவமாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்ல அமலாகவும், நஷ்டமில்லா வியாபாரமாகவும் ஆக்கி அருள்வாயாக. நெஞ்சங்களில் உள்ளவற்றை அறிகிறவனே, யா அல்லாஹ்! இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் என்னை நீ வெளியாக்குவாயாக.

யா அல்லாஹ்! உன்னுடைய ரஹ்மத்தை கட்டாயமாக்கி வைப்பவற்றையும், உன்னுடைய மன்னிப்பை உறுதியாக்கி வைப்பவற்றையும், பாவங்கள் அனைத்தையும் விட்டு சுகத்தையும், நன்மைகள் அனைத்திலிருந்து கொள்ளையடிப் பதையும், சொர்கத்தைக் கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டு ஈடேற்றத்தையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன்.

என்னுடைய இரட்சகனே! நீ எனக்கு கொடுத்ததைக் கொண்டு போதுமென்ற மனமுள்ளவனாக என்னை நீ ஆக்கிவைப்பாயாக. நீ எனக்கு

கொடுத்ததில் எனக்கு பரகத் செய்வாயாக, எனக்கு இழந்து விட்ட ஒவ்வொன்றுக்கும் உன்னிடமிருந்து நலவை என் மீது பகரமாக ஆக்கியருள்வாயாக.

## ஐந்தாம் சுற்றில்

★★★ ★★ 5

اَللّٰهُمَّ أَظِلَّنِي تَحْتَ ظِلِّ عَرْشِكَ يَوْمَ لَا ظِلَّ إِلَّا
ظِلُّكَ وَلَا بَاقِيَ إِلَّا وَجْهُكَ وَاسْقِنِيْ مِنْ حَوْضِ نَبِيِّكَ
مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ شَرْبَةً هَنِيْئَةً مَرِيْئَةً
لَا أَظْمَأُ بَعْدَهَا أَبَدًا اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا
سَأَلَكَ مِنْهُ نَبِيِّكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمْ وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَ مِنْهُ نَبِيُّكَ
سَيِّدُنَا مُحَمَّدٌ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ. اَللّٰهُمَّ إِنِّيْ

www.DheenHajService.com

أَسْأَلُكَ الْجَنَّةَ وَنَعِيْمَهَا وَمَا يُقَرِّبُنِيْ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْفِعْلٍ اَوْ عَمَلٍ وَأَعُوْذُ بِكَ مِنَ النَّارِ وَمَا يُقَرِّبُنِيْ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْفِعْلٍ اَوْ عَمَلٍ رَبِّ هَبْ لِي حُكْمًا وَأَلْحِقْنِيْ بِالصَّالِحِيْنَ

யா அல்லாஹ்! உன்னுடைய அர்ஷின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளில், உன்னுடைய உள்ளமையைத் தவிர (வேறு எதுவும்) மீதியில்லாத நாளில் உன்னுடைய அர்ஷின் நிழலின் கீழ் எனக்கு நிழல் தருவாயாக. உன்னுடைய நபி எங்கள் தலைவர் முஹம்மத் *ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்* அவர்களுடைய "கவ்ஸர்" என்னும் தடாகத்திலிருந்து இனிமையான, மகிழ்ச்சிகரமான, அதன் பிறகு எப்போதும் நான் தாகிக்கமாட்டேனே, அத்தகைய ஒரு மிடறு நீரை நீ எனக்கு புகட்டிடுவாயாக.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! உன்னுடைய நபி, எங்களின் தலைவர் முஹம்மத் *ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்* அவர்கள் உன்னிடம் எந்த நன்மைகளையெல்லாம் கேட்டார்களோ அவற்றை உன்னிடம் நான் வேண்டுகிறேன். உன்னுடைய நபி எங்கள் தலைவர் முஹம்மத் *ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்* அவர்கள் எந்த தீமைகளை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடினார்களோ அவற்றை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்பு தேடுகிறேன்.

யா அல்லாஹ்! சொர்கத்தையும் அதனுடைய பாக்கியத்தையும், மேலும் சொல்லாலும் செயலாலும் அதன் பக்கம் நெருக்கமாக்கி வைக்கும் காரியத்தை உன்னிடம் நான் வேண்டுகின்றேன். நரகத்தை விட்டும், மேலும் சொல்லாலும் செயலாலும் அதன் பக்கம் நெருக்கமாக்கி வைக்கும் காரியத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகின்றேன்.

என் இரட்சகனே, எனக்கு ஞானத்தை வழங்கி நல்லோர்களுடன் என்னை சேர்த்தருள்வாயாக!

www.DheenHajService.com

## ஆறாம் சுற்றில்

★★★ ★★★ 6

اَللّٰهُمَّ إِنَّ لَكَ عَلَيَّ حُقُوقًا كَثِيرَةً فِيمَا بَيْنِي وَبَيْنَكَ
وَحُقُوقًا كَثِيرَةً فِيمَا بَيْنِي وَبَيْنَ خَلْقِكَ. اَللّٰهُمَّ مَا
كَانَ لَكَ مِنْهَا فَاغْفِرْهُ لِيْ وَمَا كَانَ لِخَلْقِكَ فَتَحَمَّلْهُ
عَنِّيْ وَأَغْنِنِيْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ وَبِطَاعَتِكَ عَنْ
مَعْصِيَتِكَ وَبِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ يَا وَاسِعَ
الْمَغْفِرَةِ. اَللّٰهُمَّ اِنَّ بَيْتَكَ عَظِيمٌ وَوَجْهَكَ كَرِيمٌ
وَاَنْتَ يَا اَللّٰهُ حَلِيمٌ كَرِيمٌ عَظِيمٌ تُحِبُّ الْعَفْوَ
فَاعْفُ عَنِّيْ

www.DheenHajService.com

யா அல்லாஹ்! நிச்சயமாக எனக்கும் உனக்குமிடையே உள்ளவற்றில் பல கடமைகளும், எனக்கும் உன் படைப்புகளுக்குமிடையே உள்ளவற்றில் பல கடமைகளும் என் மீது உனக்காக இருக்கின்றன.

யா அல்லாஹ்! அவற்றிலிருந்து உனக்காக உள்ளவற்றை எனக்கு நீ மன்னித்தருள்வாயாக. உன் படைப்புகளுக்காக உள்ளவற்றை என்னைத் தொட்டும் நீ பொறுப் பேற்றுக் கொள்வாயாக. விசாலமான மன்னிப்பு உடையவனே! உன்னுடைய ஹலாலைக் கொண்டு உன்னுடைய ஹராமை விட்டும், உனக்கு வழிபடுவதைக் கொண்டு உனக்கு மாறு செய்வதை விட்டும், உன் கருணையைக் கொண்டு உன்னைத் தவிர உள்ளவர்களை விட்டும் என்னை நீ தேவையறச் செய்வாயாக. யா அல்லாஹ்! நிச்சயமாக உன்னுடைய இல்லம் மகத்தானது. உன்னுடைய உள்ளமை கண்ணியமானது.

யா அல்லாஹ்! நீயோ சாந்தமானவன்; மன்னிப்பாளன்; கண்ணியமானவன்; மகத்தானவன்; நீ மன்னிப்பதை விரும்புகிறாய். எனவே என்னை, நீ மன்னித்தருள்வாயாக.

## ஏழாவது சுற்றில்

★★★ ★★★ ★ 7

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ اِيْمَانًا كَامِلًا وَيَقِيْنًا صَادِقًا وَرِزْقًا وَاسِعًا وَقَلْبًا خَاشِعًا وَلِسَانًا ذَا كِرًا وَحَلَالًا طَيِّبًا وَتَوْبَتًا نَصُوْحًا وَتَوْبَتًا قَبْلَ الْمَوْتِ وَرَاحَةً عِنْدَ الْمَوْتِ وَمَغْفِرَةً وَرَحْمَةً بَعْدَ الْمَوْتِ وَالْعَفْوَ عِنْدَ الْحِسَابِ وَالْفَوْزَ فِي الْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ بِرَحْمَتِكَ يَا عَزِيْزُ يَا غَفَّارُ. رَبِّ زِدْنِيْ عِلْمًا وَاَلْحِقْنِيْ بِالصَّالِحِيْنَ

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் பரிபூரணமான ஈமானையும், உண்மையான உறுதியையும், விசாலமான உணவையும், பயப்படும் இதயத்தையும், திக்ரு செய்யும் நாவையும், மணம் பொருந்திய ஹலாலான உணவையும், கலப்பற்ற தவ்பாவையும், மரணத்திற்கு முன் தவ்பாவையும்,

www.DheenHajService.com

மரண நேரத்தில் நிம்மதியையும், மரணத்திற்கு பின் மன்னிப்பையும், ரஹ்மத்தையும், கேள்வி கணக்கின் போது மன்னிப்பையும், சொர்கத்தைக் கொண்டு வெற்றியையும், நரகத்தை விட்டு ஈடேற்றத்தையும், உன்னுடைய அருளால் உன்னிடத்தில் நான் வேண்டுகிறேன்.

யாவற்றையும் மிகைத்தவனே! அதிகம் மன்னிக்கிறவனே!! என்னுடைய இரட்சகனே!!! எனக்கு கல்வியை அதிகப்படுத்துவாயாக. நல்லடியார்களுடன் என்னைச் சேர்த்தருள் வாயாக.

## *ஒவ்வொரு சுற்றிலும் ருகுனெ யமானியிலிருந்து ஹஜ்ருல் அஸ்வத் வரை*

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ وَادْخِلْنَا الْجَنَّةَ مَعَ الْاَبْرَارِ، يَا عَزِيْزُ يَا غَفَّارُ يَا رَبَّ الْعَالَمِيْنَ

எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இவ்வுலகில் நன்மையான வாழ்வையும், மறுமையில் நன்மையான வாழ்வையும் வழங்கிடுவாயாக! நரகத்தின் வேதனையை விட்டும் எங்களை

www.DheenHajService.com

பாதுகாப்பாயாக. நல்லோர்களுடன் எங்களை சொர்கத்தில் நுழைய வைப்பாயாக. யாவற்றையும் மிகைத்தவனே! அதிகம் மன்னிப்பவனே!! அனைத்து உலகத்தார்களையும் படைத்துப் பரிபாலிப்பவனே!!!

## முல்தஜிம் துஆ

اَللّٰهُمَّ يَا رَبَّ الْبَيْتِ الْعَتِيْقِ اَعْتِقْ رِقَابَنَا وَرِقَابَ
اٰبَائِنَا وَاُمَّهَاتِنَا وَاِخْوَانِنَا وَاَوْلَادِنَا مِنَ النَّارِ يَا ذَا
الْجُوْدِ وَالْكَرَمِ وَالْفَضْلِ وَالْمَنِّ وَالْعَطَاءِ
وَالْاِحْسَانِ. اَللّٰهُمَّ اَحْسِنْ عَاقِبَتَنَا فِي الْاُمُوْرِ كُلِّهَا
وَاَجِرْنَا مِنْ خِزْيِ الدُّنْيَا وَعَذَابِ الْاٰخِرَةِ. اَللّٰهُمَّ
اِنِّيْ عَبْدُكَ وَابْنُ عَبْدِكَ وَاقِفٌ تَحْتَ بَابِكَ مُلْتَزِمٌ
بِاَعْتَابِكَ مُتَذَلِّلٌ بَيْنَ يَدَيْكَ اَرْجُوْ رَحْمَتَكَ

www.DheenHajService.com

وَاَخْشٰي عَذَابَكَ يَاقَدِيْمَ الْاِحْسَانِ. اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ اَنْ تَرْفَعَ ذِكْرِيْ وَتَضَعَ وِزْرِيْ وَتُصْلِحَ اَمْرِيْ وَتُطَهِّرَ قَلْبِيْ وَتُنَوِّرَ لِيْ فِيْ قَبْرِيْ وَتَغْفِرَ لِيْ ذَنْبِيْ وَاَسْئَلُكَ الدَّرَجَاتِ الْعُلٰي مِنَ الْجَنَّاتِ آمِيْنْ

யா அல்லாஹ்! மிகப்பழமையான இவ்வீட்டின் இரட்சகனே!! எங்களுடைய பிடரிகளையும், எங்களின் தாய், தந்தை, சகோதரர்கள், பிள்ளைகளின் பிடரிகளையும் நரக நெருப்பை விட்டும் நீ விடுதலை செய்வாயாக. கொடையும், தயாளமும், கருணையும், உபகாரமும், வெகுமதியும், பேருபகாரமும் உடையவனே,

யாஅல்லாஹ்! எங்களின் முடிவை எல்லா காரியங்களிலும் அழகாக்கிவைத்து, உலகின் கேவலத்தை விட்டும் மறுமையின் வேதனையை விட்டும் எங்களை காப்பாற்றுவாயாக.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன் அடிமை. உன் அடிமையின் மகன். உன் (வீட்டு) வாசலுக்கு கீழ் நின்று உன் வீட்டு வாசற்படிகளை

பற்றிப்பிடித்தவனாக, உனக்கு முன்னால் தாழ்மையாக நின்று கொண்டிருக்கிறேன். உன்னுடைய ரஹ்மத்தை நான் ஆதரவு வைத்து, உன்னுடைய நரகின் வேதனையை பயப்படுகின்றேன். உபகாரம் செய்வதில் பூர்வீகமானவனே, யா அல்லாஹ்! என்னுடைய நினைவை நீ உயர்த்த வேண்டும் என்றும், என் காரியத்தை சீர்படுத்த வேண்டு என்றும், என் இதயத்தை பரிசுத்தப்படுத்த வேண்டும் என்றும், என் கப்ரில் எனக்கு ஒளியை ஏற்படுத்த வேண்டும் என்றும், என்னுடைய பாவத்தை நீ மன்னிக்க வேண்டும் என்றும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். இன்னும் சுவர்கத்தில் உயர்ந்த பதவிகளையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். ஏற்றுக்கொள்வாயாக.

**முல்தஜிமில் நின்று துஆ கேட்பது அவசியம். "ஏதேனும் தேவையுள்ளவர், அல்லது துன்பம் உடையவர் முல்தஜிமிலிருந்து துஆ கேட்டால் அல்லாஹ்தஆலா அவருடைய தேவைகளை நிறைவேற்றி வைத்து, அவருடைய துன்பத்தை நீக்குவான்." என்று ஒரு ஹதீஸில் அறிவிக்கப் பட்டுள்ளது.**

## மகாமே இப்ராஹீம் துஆ...

اَللّٰهُمَّ إِنَّكَ تَعْلَمُ سِرِّيْ وَعَلانِيَتِي فَاقْبَلْ مَعْذِرَتِي
وَتَعْلَمُ حَاجَتِي فَأَعْطِنِي سُؤْلِيْ وَتَعْلَمُ مَا فِيْ نَفْسِيْ
فَاغْفِرْ لِيْ ذُنُوْبِيْ اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ إِيْمَانًا يُبَاشِرُ قَلْبِيْ
وَيَقِيْنًا صَادِقًا حَتّٰى أَعْلَمَ أَنَّهُ لا يُصِيْبُنِيْ إِلَّا مَا
كَتَبْتَ لِيْ رِضًا مِنْكَ بِمَا قَسَّمْتَ لِيْ أَنْتَ وَلِيِّيْ فِي
الدُّنْيَا وَالْآخِرَةِ تَوَفَّنِيْ مُسْلِمًا وَأَلْحِقْنِيْ
بِالصَّالِحِيْنَ. اَللّٰهُمَّ لَا تَدَعْ لَنَا فِيْ مَقَامِنَا هٰذَا ذَنْبًا
إِلَّا غَفَرْتَهُ وَلَا هَمًّا إِلَّا فَرَّجْتَهُ وَلَا دَيْنًا إِلَّا قَضَيْتَهُ
وَلَا حَاجَةً مِنْ حَوَائِجِ الدُّنْيَا وَالْآخِرَةِ إِلَّا قَضَيْتَهَا
وَيَسَّرْتَهَا يَا أَرْحَمَ الرَّاحِمِيْنَ. اَللّٰهُمَّ يَسِّرْ أُمُوْرَنَا

www.DheenHajService.com

وَاشْرَحْ صُدُوْرَنَا وَنَوِّرْ قُلُوْبَنَا وَاخْتِمْ بِالصَّالِحَاتِ

أَعْمَالَنَا. اَللّٰهُمَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا

بِالصَّالِحِيْنَ غَيْرَ خَزَايَا وَلَا مَفْتُوْنِيْنِ آمِيْنَ يَا رَبَّ

الْعَالَمِيْنَ وَصَلَّى اللهُ تَعَالٰي وَسَلَّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ

وَاٰلِه وَاَصْحَابِه اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

யா அல்லாஹ்! நிச்சயமாக நீ என்னுடைய இரகசியத்தையும், பகிரங்கத்தையும் நன்கு அறிவாய். எனவே, என்னுடைய மன்னிப்புக் கோருதலை நீ ஏற்றுக் கொள்வாயாக. என்னுடைய தேவையை நீ அறிவாய். ஆகவே, நான் கேட்பதை நீ தந்தருள்வாயாக. என் மனதில் உள்ளதையும் நீ அறிவாய். ஆகையால், என் பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக.

யா அல்லாஹ்! நீ எனக்கு விதியாக்கியதைத் தவிர (வேறு எதுவும்) எனக்கு ஏற்படாது என்று நான் அறிவதற்காக என் இதயத்தை சேர்ந்திருக்கும் படியான ஈமானையும், உண்மையான உறுதியையும், நீ எனக்கு பங்கிட்டுக் கொடுத்ததைக்

www.DheenHajService.com

கொண்டு திருப்தியையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். நீ எனக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் உதவியாளன். என்னை முஸ்லிமாக மரணமடையச் செய்து நல்லோர்களுடன் என்னைச் சேர்த்தருள்வாயாக.

யா அல்லாஹ்! எங்களுடைய இந்த இடத்தில் எந்த பாவத்தையும் அதனை நீ மன்னிக்காமல், எந்த கவலையையும் அதனை நீ நீக்காமல், எந்த தேவையையும் அதனை நீ நிறைவேற்றாமல், அதனை இலேசாக்காமல் விட்டுவிடாதே. எனவே எங்களுடைய காரியங்களை இலேசாக்கி வைத்து, எங்களுடைய நெஞ்சங்களை விரிவாக்கி வைத்து, எங்களின் உள்ளங்களை ஒளிமயமாக்கி வைத்து, எங்களுடைய அமல்களை நற்செயல்களைக் கொண்டு முடிவாக்கி வைப்பாயாக.

யா அல்லாஹ்! எங்களை, முஸ்லிம்களாக மரணமடையச் செய்து, கேவலப்படாதவர்களாக, குழப்பத்தில் ஆக்கப்படாதவர்களாக நல்லோர் களுடன் எங்களை சேர்த்தருள்வாயாக. ஆமீன்; யாரப்பல் ஆலமீன். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் தோழர்கள், குடும்பத்தினர் யாவரின் மீதும் இறைவன் அருள்பாலிப்பானாக. புகழ் அனைத்தும் அகிலத்தை இரட்சிக்கும் இறைவனுக்கே.



www.DheenNajService.com

மீஜாபே ரஹ்மத் இடத்தில்...

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّيْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ خَلَقْتَنِيْ وَأَنَا عَبْدُكَ
وَأَنَا عَلٰى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ أَعُوْذُ بِكَ مِنْ
شَرِّ مَا صَنَعْتُ أَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَأَبُوْءُ بِذَنْبِيْ
فَاغْفِرْ لِيْ فَإِنَّهُ لَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ . اَللّٰهُمَّ إِنِّيْ
أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ مِنْهُ عِبَادُكَ الصَّالِحُوْنَ ،
وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا اسْتَعَاذَكَ مِنْهُ عِبَادُكَ
الصَّالِحُونَ.اَللّٰهُمَّ بِأَسْمَائِكَ الْحُسْنٰى وَصِفَاتِكَ
الْعُلْيَا طَهِّرْ قُلُوْبَنَا مِنْ كُلِّ وَصْفٍ يُبَاعِدُنَا عَنْ
مُشَاهَدَتِكَ وَمُحَبَّتِكَ وَاَمِتْنَا عَلَى السُّنَّةِ وَالْجَمَاعَةِ
وَالشَّوْقِ اِلٰى لِقَائِكَ يَا ذَالْجَلَالِ وَالْاِكْرَامِ اَللّٰهُمَّ

www.DheenHajService.com

نَوِّرْ بِالْعِلْمِ قَلْبِيْ وَاسْتَعْمِلْ بِطَاعَتِكَ بَدَنِيْ وَخَلِّصْ
مِنَ الْفِتَنِ سِرِّيْ وَاشْغِلْ بِالْاِعْتِبَارِ فِكْرِيْ وَقِنِيْ شَرَّ
وَسَاوِسِ الشَّيْطَانِ وَاَجِرْنِيْ مِنْهُ يَا رَحْمٰنُ حَتّٰى
لَايَكُوْنَ لَهُ عَلَيَّ سُلْطَانٌ رَبَّنَا إِنَّنَا اٰمَنَّا فَاغْفِرْ لَنَا
ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ

இறைவா! நீயே இரட்சகன்; உன்னையன்றி வேறு நாயன் கிடையாது. நான் உனது அடிமை. என்னால் முடிந்தவரை உனது உடன்பாட்டிலும், உன்னிடத்தில் வழங்கிய வாக்குறுதியிலும் இருக்கிறேன். நான் செய்யும் காரியங்களின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு கோருகிறேன். என் மீது உள்ள உனது உபகாரங்களை உனக்காக சேமித்து வந்துள்ளேன். என் பாவங்களோடும் வந்துள்ளேன். என் பாவங்களை மன்னித்து விடுவாயாக. பாவங்களை உன்னையன்றி யாரும் மன்னிக்க முடியாது.

யா அல்லாஹ்!! நல்லடியார்கள் உன்னிடத்தில் எந்த நன்மைகளை எல்லாம் கேட்டுப்

பெற்றார்களோ அவற்றை உன்னிடம் வேண்டுகிறேன். நல்லடியார்கள் எந்தந் தீங்குகளை விட்டெல்லாம் பாதுகாப்பு கோரினார்களோ அவற்றிலிருந்து பாதுகாப்பு கோருகிறேன். இறைவா! உனது அழகிய நாமங்களின் பொருட்டினால், உயர்வான உனது தனித் தன்மைகளின் பொருட்டினால், உனது நேசம், உனது தரிசனம் ஆகியவற்றை விட்டும் எங்களை தூரமாக்கி விடக்கூடிய அனைத்து தன்மைகளை விட்டும் எங்களது உள்ளங்களை தூய்மையாக்கு வாயாக. சுன்னத் ஜமாஅத் கொள்கையின் மீதும், உன்னை தரிசிக்கிற ஆசையிலும் நிலைத்திருக்கும் நிலையில் எங்களை மரணிக்கச் செய்வாயாக. கண்ணிய மிக்கவனே! கம்பீரமானவனே!

யா அல்லாஹ்!! கல்வியால் எனது உள்ளத்தை ஒளிமயமாக்கு. உன்னை வழிபடுவதில் என் உடலை இயங்கச் செய்வாயாக. என் அந்தரங் கங்களை குழப்பத்திலிருந்தும் தூய்மையாக்குவாக. படிப்பினைகள் பெறுவதில் என் சிந்தனையை ஈடுபடச் செய்வாயாக. ஷைத்தானின் ஊசலாட்ட தீங்கிலிருந்து என்னை பாதுகாப்பாயாக. ரஹ்மானே! என் மீது எவ்வித ஆதிக்கம் இல்லாத வகையில் ஷைத்தானிடமிருந்து என்னை விடுவிப்பாயாக. ரட்சகனே! நிச்சயமாக நாங்கள்

உன்னை விசுவாசித்தோம். எங்களது பாவங்களை மன்னித்து விடுவாயாக. எங்களை நரக வேதனையை விட்டு காப்பாற்றுவாயாக.

### ஜம் ஜம் நீர் குடிக்கும் போது...

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا وَاسِعًا وَشِفَاءً
مِنْ كُلِّ دَاءٍ

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் பலன் தரும் கல்வியையும், தாராளமான உணவையும், எல்லா நோய்களிலிருந்து சுகத்தையும் உன்னிடத்தில் வேண்டுகிறேன்.

### உம்ராவின் “ஸயீ” உடைய நிய்யத்து...

اَللّٰهُمَّ اِنِّيْ اُرِيْدُ سَعْيَ الْعُمْرَةِ بَيْنَ الصَّفَا وَالْمَرْوَةِ
سَبْعَةَ اَشْوَاطٍ لِلّٰهِ تَعَالٰى فَيَسِّرْهُ لِيْ وَتَقَبَّلْهُ مِنِّيْ

யா அல்லாஹ்! உனக்காக ஸஃபா மர்வாவுக் கிடையில் ஏழு சுற்றுகள் உம்ராவின் ஸயீயாகச் செய்ய நாடுகிறேன். எனவே இதனை எனக்கு நீ எளிதாக்கி வைத்து இதனை என்னிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக.

www.DheenHajService.com

**“ஸயீ” ஆரம்பிக்கும் முன் ஸஃபா மலையருகில் நின்று பின் வரும் வசனத்தை கூற வேண்டும்.**

بِسْمِ اللهِ اَبْدَءُ بِمَا بَدَأَ اللهُ بِهِ. إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيمٌ

“நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவை. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜுசெய்கிறாரோ, அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் நன்றி பாராட்டுகிறவனாகவும் நன்கு அறிந்தவனாகவும் இருக்கிறான்.”

இந்த வசனத்தில் அல்லாஹ் எதைக் கொண்டு ஆரம்பித்துள்ளானோ அதனைக் கொண்டு அல்லாஹ்வின் திரு நாமத்தால் நான் ஆரம்பிக்கிறேன்.



www.DheenHajService.com

**பிறகு ஸஃபா மலையில் சற்று உயரம் வரை ஏறி, பைதுல்லாஹ்வை முன்னோக்கி நின்று கொண்டு, இரு கைகளையும் துஆ கேட்பது போல் உயர்த்திக் கொண்டு, அல்லாஹ்வைப் புகழ்ந்து பிறகு சப்தமிட்டு, "அல்லாஹு அக்பர்" என்று கூறிய பிறகு, பின் வரும் வாசகத்தை ஒரு தடவை கூற வேண்டும்.**

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு வேறு யாதோர் இணையுமில்லை. ஆட்சியனைத்தும் அவனுக்கே. புகழனைத்தும் அவனுக்கே. அவன் அனைத்து பொருட்களின் மீதும் சக்தி பெற்றவன்.

**"ஸயீ" உடைய அனைத்துச் சுற்றுக்களிலும் அடைப்புக் குறிக்குள் உள்ள துஆவை இரு பச்சைத் தூண்களுக்கு இடையில் ஓதிக் கொள்ளவும்.**

www.DheenHajService

## ஸயீ உடைய துஆக்கள்...

| முதல் சுற்றில் | 1 | ஸஃபா to மர்வா |
|---|---|---|

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ كَبِيْرًا

وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا ، وَسُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ وَبِحَمْدِهِ

الْكَرِيْمِ بُكْرَةً وَّأَصِيْلاً وَمِنَ اللَّيْلِ فَاسْجُدْ لَهُ

وَسَبِّحْهُ لَيْلًا طَوِيْلًا لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ اَنْجَزَ

وَحْدَهُ صَدَقَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ

وَحْدَهُ لَاشَيْءَ قَبْلَهُ وَلَا بَعْدَهُ يُحْيِيْ وَيُمِيْتُ وَهُوَ

حَيٌّ دَائِمًا لَايَمُوْتُ وَلَايَفُوْتُ اَبَدًا بِيَدِهِ الْخَيْرُ

وَإِلَيْهِ الْمَصِيْرُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ {رَبِّ اغْفِرْ

وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ إِنَّكَ

تَعْلَمُ مَا لَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللهُ الْأَعِزُّ الْأَكْرَمُ}

رَبَّنَا نَجِّنَا مِنَ النَّارِ سَالِمِيْنَ غانِمِيْنَ فَرِحِيْنَ

مُسْتَبْشِرِيْنَ مَعَ عِبَادِكَ الصَّالِحِيْنَ مَعَ الَّذِيْنَ

أَنْعَمَ اللهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّينَ وَالصِّدِّيْقِيْنَ

وَالشُّهَدَآءِ وَالصَّالِحِيْنَ وَحَسُنَ أُولَئِكَ رَفِيْقًا

ذٰلِكَ الْفَضْلُ مِنَ اللهِ وَكَفٰى بِاللهِ عَلِيمًا ، لَا إِلٰهَ إِلَّا

اللهُ حَقًّا حَقًّا لَا إِلٰهَ إِلَّا اللهُ تَعَبُّدًا ورِقًّا ، لَا إِلٰهَ إِلَّا

اللهُ وَلَا نَعْبُدُ إِلَّا إِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ

الْكَافِرُوْنَ ، إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللهِ فَمَنْ

حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ

بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيمٌ

அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ் மிக மிகப் பெரியவன். புகழனைத்தும் மிக அதிகமாக அல்லாஹ்வுக்கே உரியன. காலையிலும், மாலையிலும் அல்லாஹ்வை அவனுடைய புகழுடன் துதி செய்கிறேன். இரவில் அவனை சிரம் பணிந்து வணங்குங்கள். இரவில் அதிகமாக அவனை துதியுங்கள். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் தஆலாவைத் தவிர வேறுயாருமில்லை. அவன் தனித்தவன். அவன் தன்னுடைய வாக்கை உண்மை படுத்தினான். தன் அடியாருக்கு உதவி செய்தான். அவன் தனித்தவனாக எதிரிப் படையினரை தோல்வியுறச் செய்தான். அவனுக்கு முன்னும் அவனுக்குப் பின்னும் எப் பொருளும் இல்லையே, அத்தகையவன் அவனே (அனைத்துப் பொருள்களுக்கும்) உயிர் கொடுக்கிறான். அவனே (அனைத்தையும்) மரணிக்கச் செய்கிறான். அவன் நிரந்தரமாக ஜீவித்திருக்கிறான். என்றும் மரணமடைய மாட்டான். எப்போதும் தவறிப் போய் விட மாட்டான். நன்மைகள் அனைத்தும் அவன் வசமே இருக்கின்றன. அவன் அனைத்துப் பொருள்களின் மீதும் சக்தி பெற்றவன்.



www.DharulHajService.com

என் இரட்சகனே! நீ என்னை மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

எங்கள் இரட்சகனே! நாங்கள் சுகமானவர்களாக, பெரும் (கனீமத்) பொருள் பெற்றவர்களாக, மகிழ்ச்சி அடைந்தவர்களாக, உன்னுடைய நல்லடியார்களுடனும், அல்லாஹ் யாரின் மீது அருள் புரிந்துள்ளானோ அத்தகைய நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள், ஆகியோருடன் சேர்த்து நற்செய்தி பெற்றவர்களாக இருக்கும் நிலையில் நரகத்தை விட்டும் எங்களை காப்பாற்றுவாயாக. அது அல்லாஹ்வின் கருணையாகும். அறிந்தவனாக இருப்பதில் அல்லாஹ் போதுமானவன்.

உண்மையிலும் உண்மையாக வணக்கத்திற் குறியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாரு மில்லை. வணங்குவதாலும் அடிமைத்தனத்தாலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. காபிர்கள் வெறுத்தாலும் சரி, இந்த மார்கத்தை அவனுக்காகவே தூய்மையாக்கிய

வர்களாக இருக்கும் நிலையில் அவனைத் தவிர வேறு யாரையும் நாங்கள் வணங்கமாட்டோம்.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவை. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றி வருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மை செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்தவ னாகவும் இருக்கிறான்.

| | | |
|---|---|---|
| ***இரண்டாம் சுற்றில்*** | **2** | ***மர்வா* to *ஸஃபா*** |

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ الْوَاحِدُ الْفَرْدُ الصَّمَدُ لَمْ يَتَّخِذْ

صَاحِبَةً وَّلَا وَلَدًا وَلَمْ يَكُنْ لَّهُ شَرِيْكٌ فِي الْمُلْكِ

وَلَمْ يَكُنْ لَّهُ وَلِيٌّ مِّنَ الذُّلِّ وَكَبِّرْهُ تَكْبِيْرًا اَللّٰهُمَّ

إِنَّكَ قُلْتَ فِيْ كِتَابِكَ الْمُنَزَّلِ اُدْعُوْنِيْ اَسْتَجِبْ لَكُمْ
دَعَوْنَاكَ رَبَّنَا فَاغْفِرْ لَنَا كَمَا اَمَرْتَنَا اِنَّكَ لَاتُخْلِفُ
الْمِيْعَادَ. رَبَّنَا إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِي لِلْإِيمَانِ
أَنْ آمِنُوْا بِرَبِّكُمْ فَآمَنَّا رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا
وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ. رَبَّنَا وَآتِنَا
مَا وَعَدْتَنَا عَلَى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيَامَةِ إِنَّكَ
لَا تُخْلِفُ الْمِيْعَادَ. رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَإِلَيْكَ أَنَبْنَا
وَإِلَيْكَ الْمَصِيْرُ. رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِيْنَ
سَبَقُوْنَا بِالْإِيْمَانِ وَلَا تَجْعَلْ فِيْ قُلُوْبِنَا غِلًّا لِلَّذِيْنَ
آمَنُوْا رَبَّنَا إِنَّكَ رَءُوْفٌ رَحِيْمٌ {رَبِّ اغْفِرْ وَارْحَمْ

www.DreemHajService.com

وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ إِنَّكَ تَعْلَمُ مَا لَا
نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللهُ الْأَعَزُّ الْأَكْرَمُ } إِنَّ الصَّفَا
وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ
فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا
فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர். வலில்லாஹில் ஹம்து.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் ஒருவன், தனித்தவன்; தேவையற்றவன், அவன் மனைவியையோ குழந்தையையோ (தனக்கு) ஆக்கிக் கொள்ள வில்லை. அவன் ஆட்சியில் அவனுக்கு எந்த கூட்டாளியும் இல்லை. இயலாமையினால் அவனுக்கு எந்த உதவியாளனும் இல்லை. தக்பீர் கூறி அவனைப் பெருமைப்படுத்துவீராக.

www.DreamHajService.com

யா அல்லாஹ்! “என்னை அழையுங்கள். நான் உங்களுக்கு பதில் கூறுகிறேன்.” என்று உன்னால் இறக்கி வைக்கப்பட்ட (உன்னால் இறக்கிய வேதத்தில் நீ கூறியுள்ளாய்.) எங்கள் இரட்சகனே! நீ கட்டளையிட்டது போன்றே உன்னை நாங்கள் அழைத்தோம். எங்களை நீ மன்னித்தருள்வாயாக. நிச்சயமாக நீ வாக்கு மாற்றம் செய்யமாட்டாய்.

எங்கள் இரட்சகனே! (உங்களுடைய ரப்பை விசுவாசம் கொள்ளுங்கள்) என்று ஈமானின் பக்கம் அழைகின்ற அழைப்பாளர் ஒருவரின் அழைப்பை நாங்கள் செவியுற்றோம். எனவே நாங்கள் ஈமான் (விசுவாசம்) கொண்டோம். எங்கள் இரட்சகனே! எங்களுடைய பாவங்களை எங்களுக்கு நீ மன்னித் தருள்வாயாக. எங்களை விட்டும் எங்களுடைய தீமைகளை அழித்துவிடுவாயாக. நல்லோர்களுடன் எங்களை மரணிக்கச் செய்வாயாக.

எங்கள் இரட்சகனே! உன் தூதரின் மூலம் எங்களுக்கு நீ வாக்களித்துள்ளதை எங்களுக்கு நீ வழங்கிடுவாயாக. கியாமத் நாளில் நீ எங்களை கேவலப்படுத்தி விடாதே. நிச்சயமாக நீ வாக்கு மாற்றம் செய்யமாட்டாய். எங்கள் இரட்சகனே! உன் மீதே நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம். உன் பக்கமே நாங்கள் மீண்டோம். சென்றடையும் இடமும் உன் பக்கமேயாகும்.

எங்கள் இரட்சகனே! எங்களையும் ஈமானால் எங்களுக்கு முந்தி சென்றுவிட்ட எங்கள் சகோதரர்களையும் மன்னித்துவிடுவாயாக. ஈமான் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் வஞ்சக எண்ணத்தை ஆக்காதிருப் பாயாக. எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நீ பாசமுள்ளவன்; அருளாளன்.

என் இரட்சகனே! நீ மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

| | | |
|---|---|---|
| மூன்றாம் சுற்றில் | 3 | ஸஃபா to மர்வா |

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

رَبَّنَا اَتْمِمْ نُوْرَنَا وَاغْفِرْلَنَا اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٍ

اَللّٰهُمَّ إِنِّى أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ عَاجِلِهِ وَاٰجِلِهِ

وَاَسْتَغْفِرُكَ لِذَنْبِيْ وَاَسْئَلُكَ رَحْمَتَكَ يَااَرْحَمَ

الرَّاحِمِيْنَ {رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ

وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ إِنَّكَ تَعْلَمُ مَالَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ

اللّٰهُ الْأَعِزُّ الْأَكْرَمُ} رَبِّيْ زِدْنِيْ عِلْمًا لَا تُزِغْ قَلْبِيْ

بَعْدَ إِذْ هَدَيْتَنِيْ وَهَبْ لِيْ مِنْ لَّدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ

الْوَهَّابُ اَللّٰهُمَّ عَافِنِىْ فِىْ سَمْعِىْ اَللّٰهُمَّ عَافِنِىْ فِىْ

بَصَرِىْ لَا إِلٰهَ إِلاَّ أَنْتَ اَللّٰهُمَّ إِنِّى أَعُوْذُ بِكَ مِنْ
عَذَابِ الْقَبْرِ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّيْ كُنْتُ مِنَ
الظَّالِمِيْنَ اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَ الْفَقْرِ
اَللّٰهُمَّ أَعُوْذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ وَبِمُعَافَاتِكَ مِنْ
عُقُوْبَتِكَ وَأَعُوْذُ بِكَ مِنْكَ لَا أُحْصِىْ ثَنَاءً عَلَيْكَ
أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلٰى نَفْسِكَ فَلَكَ الْحَمْدُ حَتّٰى
تَرْضٰى ، إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ فَمَنْ
حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ
بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து.



www.DheenHajService.com

எங்கள் இரட்சகனே! எங்களுக்கு எங்கள் ஒளியை நிரப்பமாக்கி வைத்து எங்களை மன்னித்து விடுவாயாக. நிச்சயமாக நீ எல்லா பொருட்களின் மீதும் சக்திபெற்றவன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் நன்மை அனைத்தையும் அதில் விரைவானதையும் தாமதமானதையும் உன்னிடம் வேண்டுகிறேன். என் பாவத்திற்கு உன்னிடம் மன்னிப்பு தேடுகிறேன். உன்னுடைய அருளையும் நான் வேண்டுகிறேன். அருளாளர்களுக்கெல்லாம் மாபெரும் அருளாளனே!

என் இரட்சகனே! எனக்கு கல்வியை அதிகப்படுத்துவாயாக. நீ எனக்கு நேர்வழி காட்டிய பின் என்னை சருகச் செய்து விடாதே. உன் புறத்திலிருந்து நீ எனக்கு ரஹ்மத்தை அன்பளிப்பாயாக. நிச்சயமாக நீயே பெருங் கொடையாளன்.

யா அல்லாஹ்! என் செவியிலும், என் பார்வையிலும் எனக்கு சுகமளிப்பாயாக. உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். உன்னைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறு யாருமில்லை. மிகப்

www.DheenHajService.com

பரிசுத்தமானவன். நிச்சயமாக நான் அநியாயக் காரர்களில் உள்ளவனாகிவிட்டேன்.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் குஃப்ரை விட்டும் வறுமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யா அல்லாஹ்! உன் திருப் பொருத்தத்தின் பொருட்டால் உன் கோபத்தை விட்டும், உன் மன்னிப்பின் பொருட்டால் உன்னுடைய தண்டனையை விட்டும், உன் அருளின் பொருட்டால் உன் வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். நான் உன்னை முழுமையாக புகழ்ந்து விட முடியாது. நீ உன்னை எவ்வாறு புகழ்ந்து கொண்டாயோ அவ்வாறே நீ இருக்கிறாய். நீ (எங்களை) பொருந்திக் கொள்வதற்காக புகழனைத்தும் உனக்கே சொந்தம். நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

www.DheenHajService.com

| | | |
|---|---|---|
| நான்காம் | | |
| சுற்றில் | 4 | மர்வா to ஸஃபா |

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

اَللّٰهُمَّ إِنِّىٓ أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا تَعْلَمُ وَاَعُوْذُ بِكَ مِنْ

شَرِّ مَا تَعْلَمُ وَاسْتَغْفِرُكَ مِنْ كُلِّ مَا تَعْلَمُ اِنَّكَ

اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ. لَآ إِلٰهَ إِلَّا اللّٰهُ الْمَلِكُ الْحَقُّ

الْمُبِيْنُ مُحَمَّدٌ رَسُوْلُ اللّٰهِ الصَّادِقُ الْوَعْدُ الْاَمِيْنُ.

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ كَمَا هَدَيْتَنِيْ لِلْاِسْلَامِ اَنْ

لَّاتَنْزِعُهُ مِنِّيْ حَتّٰى تَتَوَفَّانِيْ وَاَنَا مُسْلِمٌ اَللّٰهُمَّ

اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَفِيْ سَمْعِيْ نُوْرًا وَفِيْ بَصَرِيْ نُوْرًا

اَللّٰهُمَّ اشْرَحْ لِيْ صَدْرِيْ وَيَسِّرْ لِيْ أَمْرِيْ وَأَعُوْذُ بِكَ



www.DheenHajService.com

مِنْ وَسَاوِسِ الصَّدْرِ وَشَتَاتِ الأَمْرِ وَفِتْنَةِ الْقَبْرِ

اَللّٰهُمَّ إِنِّىْ أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ مَا يَلِجُ فِى اللَّيْلِ وَشَرِّ

مَا يَلِجُ فِى النَّهَارِ وَشَرِّ مَا تَهُبُّ بِهِ الرِّيَاحُ يَا اَرْحَمَ

الرَّاحِمِيْنَ. سُبْحَانَكَ مَا عَبَدْنَاكَ حَقَّ عِبَادَتِكَ يَا

اَللّٰهُ سُبْحَانَكَ مَا ذَكَرْنَاكَ حَقَّ ذِكْرِكَ يَا اَللّٰهُ {رَبِّ

اغْفِرْ وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ

إِنَّكَ تَعْلَمُ مَا لَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللّٰهُ الْأَعَزُّ

الْأَكْرَمُ} إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ فَمَنْ

حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ

بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللَّهَ شَاكِرٌ عَلِيمٌ

www.DheenHajService.com

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து.

யா அல்லாஹ்! நீ அறிந்துள்ள நன்மையிலிருந்து நிச்சயமாக நான் உன்னிடம் வேண்டுகிறேன். நீ அறிந்துள்ள தீமையை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்பு தேடுகிறேன். நீ அறிந்துள்ள (பாவங்கள்) ஒவ்வொன்றுக்கும் உன்னிடம் நான் மன்னிப்புத் தேடுகிறேன். நிச்சயமாக நீ தான் மறைவானவற்றை அதிகம் அறிந்தவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் மிகத் தெளிவான, சத்தியமான அரசன். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதராவார்கள், அன்னார் உண்மையாளர் நம்பிக்கைக்குரிய வாக்குறுதியாளர்.

யா அல்லாஹ்! இஸ்லாத்தின் பால் நீ எனக்கு வழிகாட்டியது போன்று நான் முஸ்லிமாயிருக்கும் நிலையில் என்னை நீ மரணிக்கச் செய்யும் வரை அதனை என்னிடமிருந்து நீக்க வேண்டாமென்று உன்னிடம் நான் வேண்டிக் கொள்கிறேன்.

யா அல்லாஹ்! என்னுடய இதயத்தில் ஒளியை ஏற்படுத்துவாயாக. என் செவியிலும், என் பார்வையிலும் ஒளியை ஏற்படுத்துவாயாக.

யா அல்லாஹ்! என் இரட்சகனே, என்னுடைய நெஞ்சை எனக்கு விரிவாக்கி வைத்து, என் காரியத்தை எனக்கு நீ இலேசாக்கி வைப்பாயாக. உள்ளத்தில் உண்டாகும் ஊசலாட்டங்களின் தீமையை விட்டும், காரியம் சிதறுவதை விட்டும், கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்.

யா அல்லாஹ்! இரவில் நுழைகின்ற தீங்கை விட்டும், பகலில் நுழைகின்ற தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். அருளாளர் களுக்கெல்லாம் மாபெரும் அருளாளனே! நீ மகா தூயவன்! யா அல்லாஹ்! வணங்கிடும் சரியான முறைப்படி உன்னை நான் வணங்கவில்லை. நீ மகா தூயவன்! யா அல்லாஹ்! உன்னை திக்ரு செய்யும் முறைப்படி நாங்கள் திக்ரு செய்யவில்லை.

என் இரட்சகனே! நீ மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

| | | |
|---|---|---|
| ***ஐந்தாவது சுற்றில்*** | **5** | ***ஸஃபா to மர்வா*** |

اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

سُبْحَانَكَ مَا شَكَرْنَاكَ حَقَّ شُكْرِكَ يَا اَللهُ

سُبْحَانَكَ مَا اَعْلٰى شَأْنُكَ يَا اَللهُ اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا

الْإِيمَانَ وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ

وَالْفُسُوْقَ وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِيْنَ

{رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا

تَعْلَمُ إِنَّكَ تَعْلَمُ مَا لَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللهُ الْأَعَزُّ

الْأَكْرَمُ} اَللّٰهُمَّ قِنِيْ عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

اَللّٰهُمَّ اهْدِنِيْ بِالْهُدٰى وَنَقِّنِيْ بِالتَّقْوٰى وَاغْفِرْلِيْ

فِي الْآخِرَةِ وَالْأُوْلٰى اَللّٰهُمَّ ابْسُطْ عَلَيْنَا مِنْ بَرَكَاتِكَ

وَرَحْمَتِكَ وَفَضْلِكَ وَرِزْقِكَ اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ

النَّعِيْمَ الْمُقِيْمَ الَّذِيْ لَا يَحُوْلُ وَلَا يَزُوْلُ اَبَدًا.

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْ قَلْبِيْ نُوْرًا وَفِيْ بَصَرِيْ نُوْرًا وَفِيْ

www.DheenHajService.com

لِسَانِيْ نُوْرًا وَعَنْ يَمِيْنِيْ نُوْرًا وَعَنْ يَسَارِيْ نُوْرًا
وَمِنْ فَوْقِيْ نُوْرًا وَمِنْ تَحْتِيْ نُوْرًا وَاجْعَلْ فِيْ نَفْسِيْ
نُوْرًا وَعَظِّمْ لِيْ نُوْرًا يَا رَبِّيْ نُوْرُ السَّمٰوَاتِ وَالْاَرْضِ
رَبِّ اشْرَحْ لِيْ صَدْرِيْ وَيَسِّرْ لِيْ أَمْرِيْ إِنَّ الصَّفَا
وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللّٰهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ
فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا
فَإِنَّ اللّٰهَ شَاكِرٌ عَلِيمٌ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து.

யா அல்லாஹ்! நீ மகா தூயவன். நாங்கள் உனக்கு நன்றி செலுத்தும் முறைப்படி நன்றி செலுத்தவில்லை. யா அல்லாஹ்! நீ மகா தூயவன். உன்னுடைய அந்தஸ்த்து மிக உயர்வானது.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! எங்களுக்கு ஈமானை பிரியமானதாக ஆக்கிவைத்து, அதனை எங்களுடைய உள்ளங்களில் அலங்காரமாக்கி வைத்திடுவாயாக. நிராகரிப்பையும், பாவங்களையும், மாறு செய்வதையும் எங்களுக்கு வெறுப்பாக்கி வைத்து, எங்களை நேர்வழியார்களில் உள்ளவர்களாக ஆக்கிவைத்திடுவாயாக.

என் இரட்சகனே! நீ என்னை மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

யா அல்லாஹ்! உன் அடியார்களை உயிர் கொடுத்து நீ எழுப்பிடும் நாளில் உன் தண்டனையை விட்டும் என்னை காத்திடுவாயாக. யா அல்லாஹ்! நேர்வழியைக் கொண்டு எனக்கு வழிகாட்டுவாயாக. தக்வாவைக் கொண்டு என்னை பரிசுத்தப் படுத்துவாயாக. இம்மையிலும் மறுமையிலும் என்னை மன்னித்து அருள்வாயாக.

யா அல்லாஹ்! என்றுமே மாறிடாத நீங்கிடாத நிலையான பாக்கியத்தை உன்னிடம் நான் வேண்டுகிறேன்.

யா அல்லாஹ்! என்னுடைய உள்ளத்தில் ஒளியை, என் பார்வையில் ஒளியை, என் செவியில் ஒளியை, என் வலப்பக்கத்தில ஒளியை, என் மேல் புரத்தில் ஒளியை, என் ஆன்மாவில் ஒளியை ஏற்படுத்துவாயாக. எனக்கு ஒளியை பிரமாண்டமானதாக்குவாயாக.

என்னுடைய இரட்சகனே! என் நெஞ்சை எனக்கு விரிவாக்கி வைத்து, என் காரியத்தை எனக்கு இலேசாக்கி வைத்திடுவாயாக.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

www.DheenHajService.com

| | | |
|---|---|---|
| ஆறாவது சுற்றில் | 6 | மர்வா to ஸஃபா |

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ صَدَقَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ

وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَلَا نَعْبُدُ اِلَّا

اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ وَلَوْ كَرِهَ الْكَافِرُوْنَ.

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ كَالَّذِيْ نَقُوْلُ وَخَيْرًا مِمَّا نَقُوْلُ

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ رِضَاكَ وَالْجَنَّةَ وَأَعُوْذُ بِكَ مِنْ

سَخَطِكَ وَالنَّارِ وَمَا يُقَرِّبُنِيْ اِلَيْهَا مِنْ قَوْلٍ اَوْ فِعْلٍ

اَوْ عَمَلٍ اَللّٰهُمَّ بِنُوْرِكَ اِهْتَدَيْنَا وَبِفَضْلِكَ



www.DheenHajService.com

اِسْتَغْنَيْنَا وَفِيْ كَنَفِكَ وَاِنْعَامِكَ وَعَطَائِكَ
وَاِحْسَانِكَ اَصْبَحْنَا وَاَمْسَيْنَا أَنْتَ الأَوَّلُ فَلَا
قَبْلَكَ شَيْءٌ وَأَنْتَ الْآخِرُ فَلَا بَعْدَكَ شَيْءٌ وَأَنْتَ
الظَّاهِرُ فَلَا فَوْقَكَ شَيْءٌ وأَنْتَ الْبَاطِنُ فَلَا دُوْنَكَ
شَيْءٌ نَعُوْذُ بِكَ مِنَ الْفَلَسِ وَالْكَسَلِ وَعَذَابِ الْقَبْرِ
وَفِتْنَةِ الْغَنِيّ وَنَسْأَلُكَ الْفَوْزَ بِالْجَنَّةِ {رَبِّ اغْفِرْ
وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ إِنَّكَ
تَعْلَمُ مَالَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللهُ الْأَعَزُّ الْأَكْرَمُ} إِنَّ
الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللَّهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ
اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ بِهِمَا وَمَنْ تَطَوَّعَ
خَيْرًا فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيمٌ



www.dheenulislamservice.com

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், வலில்லாஹில் ஹம்து.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் நேர்வழியையும், பயபக்தியையும், பத்தினி தனத்தையும், பிறரிடம் தேவையற்ற தன்மையையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன். யா அல்லாஹ்! நீ சொல்வதைப் போலவும் நாங்கள் சொல்வதை விட மிக நல்லதாகவும் புகழ் அனைத்தும் உனக்கே உரியன.

யா அல்லாஹ்! உன்னுடைய திருப் பொருத்தத்தையும், சொர்கத்தையும் உன்னிடம் வேண்டுகிறேன். உன்னுடைய கோபத்தை விட்டும், நரகத்தை விட்டும், நரகின் பால் நெருக்கி வைக்கும் சொல், செயல் ஆகியவற்றிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்பு தேடுகிறேன்.

யா அல்லாஹ்! உன்னுடைய ஒளியைக் கொண்டு நாங்கள் நேர்வழிப்பெற்றோம். உன் கருனையைக் கொண்டு நாங்கள் சீமான்களாக ஆனோம். உன்னுடைய பாதுகாப்பிலே, கொடையிலே, பேருபகாரத்திலே நாங்கள் காலையில் எழுந்தோம். மாலை நேரத்தில் இருந்தோம். நீயே முதல்வன்; உனக்கு முன் எப்பொருளும் இல்லை. நீயே இறுதியானவன்; உனக்குப் பின் எப்பொருளும் இல்லை. நீயே வெளிப்படையானவன்; உனக்கு



www.DheenHajService.com

மேலே எப்பொருளும் இல்லை. நீயே அந்தரங்க மானவன்; உனக்கு கீழே எப்பொருளும் இல்லை. இன்னும் சோம்பலை விட்டும், பைத்தியத்தி லிருந்தும், கப்ருடைய வேதனையை விட்டும், செல்வத்தின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் நாங்கள் பாதுகாப்பு தேடுகிறோம். சுவனத்தைக் கொண்டு வெற்றியை உன்னிடம் கேட்கிறோம்.

என் இரட்சகனே! நீ என்னை மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

www.DheenHajService.com

ஏழாவது சுற்றில் 7 ஸஃபா to மர்வா

اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ كَبِيْرًا

وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْإِيمَانَ

وَزَيِّنْهُ فِيْ قُلُوْبِنَا وَكَرِّهْ إِلَيْنَا الْكُفْرَ وَالْفُسُوْقَ

وَالْعِصْيَانَ وَاجْعَلْنَا مِنَ الرَّاشِدِينَ {رَبِّ اغْفِرْ

وَارْحَمْ وَاعْفُ وَتَكَرَّمْ وَتَجَاوَزْ عَمَّا تَعْلَمُ إِنَّكَ

تَعْلَمُ مَا لَا نَعْلَمُ إِنَّكَ أَنْتَ اللهُ الْأَعَزُّ الْأَكْرَمُ}

اَللّٰهُمَّ اخْتِمْ بِالْخَيْرَاتِ آجَالَنَا وَحَقِّقْ بِفَضْلِكَ

آمَالَنَا وَسَهِّلْ لِبُلُوْغِ رِضَاكَ سُبُلَنَا وَحَسِّنْ فِيْ جَمِيْعِ

الْاَحْوَالِ اَعْمَالَنَا يَا مُنْقِذَ الْغَرْقٰى يَا مُنْجِيَ الْهَلْكٰى

www.DheenHajService.com

يَا شَاهِدَ كُلِّ نَجْوٰى يَا مُنْتَهٰى كُلِّ شَكْوٰى يَا قَدِيْمَ
الْاِحْسَانِ يَا دَآئِمَا الْمَعْرُوْفِ يَا مَنْ لَا غِنَي بِشَيْءٍ
عَنْهُ وَلَا بُدَّ لِكُلِّ شَيْءٍ مِنْهُ اَللّٰهُمَّ يَا مَنْ رِزْقُ كُلِّ
شَيْءٍ عَلَيْهِ وَمَصِيْرُ كُلِّ شَيْءٍ اِلَيْهِ اَللّٰهُمَّ اِنِّيْ
عَائِذُبِكَ مِنْ شَرِّ مَا اَعْطَيْتَنَا وَمِنْ شَرِّ مَا مَنَعْتَنَا
اَللّٰهُمَّ تَوَفَّنَا مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ غَيْرَ
خَزَايَا وَلَامَفْتُوْنِيْنَ رَبِّ يَسِّرْ وَلَا تُعَسِّرْ رَبِّ تَمِّمْ
بِالْخَيْرِ إِنَّ الصَّفَا وَالْمَرْوَةَ مِنْ شَعَآئِرِ اللهِ فَمَنْ
حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَنْ يَطَّوَّفَ
بِهِمَا وَمَنْ تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيْمٌ

www.DheenHajService.com

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் கபீரா வல்ஹம்துலில்லாஹி கஸீரா.

யா அல்லாஹ்! எங்களுக்கு ஈமானை பிரியமானதாக ஆக்கிவைத்து, அதனை எங்களுடைய உள்ளங்களில் அலங்காரமாக்கி வைத்திடுவாயாக. நிராகரிப்பையும், பாவங்களையும், மாறு செய்வதையும் எங்களுக்கு வெறுப்பாக்கி வைத்து, எங்களை நேர்வழியார்களில் உள்ளவர்களாக ஆக்கிவைத்திடுவாயாக. என் இரட்சகனே! நீ என்னை மன்னித்து அருள்புரிவாயாக. இன்னும் என்னை மன்னித்து சங்கை செய்வாயாக. நீ என்னில் அறிந்துள்ள என் பாவங்களை மன்னித்துவிடுவாயாக. நிச்சயமாக நாங்கள் அறியாதவற்றை நீ அறிந்திருக்கிறாய். நிச்சயமாக நீயே மிக்க கண்ணியமானவன்; சங்கைக்குறியவன்.

யா அல்லாஹ்! எங்களுடைய தவணைகளை நன்மைகளைக் கொண்டு முடிவுறச்செய்வாயாக. எங்களுடைய ஆசைகளை உன் கருணையினால் உறுதிபடுத்துவாயாக. உன்னுடைய பொருத்தத்தை பெருவதற்கு எங்களுக்கு வழிகளை இலேசாக்கி வைப்பாயாக. எல்லா நிலைகளிலும் எங்களுடைய செயல்களை அழகாக்கி வைத்திடுவாயாக. மூழ்கிக் கொண்டிருப்பவரை காப்பாற்றுகிறவனே! அழிந்து



www.DheenHajService.com

கொண்டிருப்பவரை ஈடேற்றுபவனே!! அனைத்து இரகசியங்களிலும் முன்னிலையில் இருப்பவனே!!! முறையீடுகள் அனைத்திற்கும் இறுதியானவனே, பேருபகாரம் செய்வதில் பூர்வீகமானவனே, நல்லது செய்வதில் நிரந்தர மானவனே, அவனை விட்டும் வேறு பொருளின் மூலம் தேவையற்றிருக்க முடியாதவனே, ஒவ்வொரு பொருளுக்கும் அவசியமானவனே, ஒவ்வொரு பொருளுடைய உணவும் தன் பொருப்பில் உள்ளவனே, ஒவ்வொரு பொருளும் திரும்பிச் செல்வது தன் பக்கமே உள்ளவனே! யா அல்லாஹ்! நீ எங்களுக்கு கொடுத்துள்ளவற்றின் தீங்கிலிருந்தும் நீ எங்களுக்கு தடுத்துள்ளவற்றின் தீங்கிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

யா அல்லாஹ்! எங்களை முஸ்லிம்களாக மரணமடையச் செய்து, கேவலப்படாதவர்களாக, குழப்பத்தில் ஆக்கப்படாதவர்களாக நல்லோர் களுடன் எங்களை சேர்த்தருள்வாயாக. என்னுடைய ரப்பே! (என் காரியங்களை) இலேசாக்கி வைத்திடுவாயாக, சிரமமாக்கி வைக்காதிருப்பாயாக. என்னுடைய ரப்பே! நலவைக் கொண்டு பூர்த்தியாக்கிவைப்பாயாக.

நிச்சயமாக ஸஃபாவும், மர்வாவும் அல்லாஹ்வின் அடையாள சின்னங்களில் உள்ளன. எவர் இந்த

வீட்டை (நாடி வந்து) ஹஜ்ஜு செய்கிறாரோ அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் அவ்விரண்டையும் சுற்றிவருவது அவர் மீது குற்றமாகாது. எவரேனும் நன்மையைச் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் (அவருடைய நன்மைக்கு) நன்றி பாராட்டுகிறவனாகவும், நன்கு அறிந்த வனாகவும் இருக்கிறான்.

## ஸயீ முடிந்ததும், மர்வாவில் ஓதும் துஆ

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا وَعَافِنَا وَاعْفُ عَنَّا وَعَلٰى طَاعَتِكَ
وَشُكْرِكَ اَعِنَّا وَعَلٰى غَيْرِكَ لَا تَكِلْنَا وَعَلَى الْاِسْلَامِ
وَالْاِيْمَانِ الْكَامِلِ جَمِيْعًا تَوَفَّنَا وَاَنْتَ رَاضٍ عَنَّا
اَللّٰهُمَّ بِتَرْكِ الْمَعَاصِيْ اَبَدًا مَا اَبْقَيْتَنِيْ رَبَّنَا اغْفِرْ
لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ صَلَّى
اللّٰهُ تَعَالٰى وَسَلَّمَ عَلٰى خَيْرِ خَلْقِهٖ سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ
وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ

www.DheenHajService.com

இரட்சகனே! எங்களின் வழிபாடுகளை ஏற்றுக் கொள்வாயாக! எங்களை ஆரோக்கியமாக வாழ வைப்பாயாக! எங்கள் பிழைகளை பொருத்தருள் வாயாக! உனக்கு வழிபடவும் நன்றியுடன் இருக்கவும் உதவுவாயாக! உன் அல்லாதவர்களிடம் எங்களை ஒப்படைத்து விடாதே! முழு விசுவாசத்துடனும், வழிபாட்டு உணர்வுடனும் எங்களை நீ பொருந்திக் கொண்ட நிலையிலும் மரணிக்கச் செய்வாயாக!

எப்போதும் பாவத்தை விட்டு விடுவதன் மூலம் எனக்கு அருள் காட்டுவாயாக! இரட்சகனே! என்னையும், என் பெற்றோர்களையும், முஃமின்களையும் கேள்வி கேட்கும் நாளில் மன்னித்து விடுவாயாக! நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் யாவரின் மீதும் உன் அருளைப் பொழிவாயாக!

**பின்னர் முடியைக் களைந்து அதன் பின் இஹ்ராமிலிருந்து நீங்கிக் கொள்ளலாம். இத்துடன் உம்ராவின் அமல்கள் நிறைவு பெறுகிறது. மக்காவில் தங்கியிருக்கும் காலமெல்லாம் அதிகமதிகம் தவாஃப்களையும், உம்ராக்களையும் நிறைவேற்றலாம்.**

www.DheenHajService.com

# மாமதீனா

## மதீனாவில் நுழையும் போது

اَللّٰهُمَّ هٰذَا حَرَمُ نَبِيِّكَ فَاجْعَلْهُ لِيْ وِقَايَةً مِّنَ النَّارِ

وَاَمَانَةً مِّنْ عَذَابٍ وَسُوْءِ الْحِسَابِ.

யா அல்லாஹ்! இது உன்னுடைய நபியவர்களின் ஹரமாகும். இதனை எனக்கு நரகை விட்டுப் பாதுகாப்பாகவும், வேதனையை விட்டும், தீய கேள்வி கணக்கை விட்டும் அபயமாகவும் ஆக்கியருள்வாயாக!

www.DheenHalService.com

## மஸ்ஜிதுன் நபவியில் நுழையும் போது

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ

யா அல்லாஹ்! முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும், அன்னாருடைய தோழர்கள் மீதும் நீ சலவாத்தும் ஸலாமும் கூறுவாயாக.

யா அல்லாஹ்! என்னுடைய பாவங்களை மன்னித்து, உன்னுடைய அருள் வாசல்களை எனக்குத் திறந்துவிடுவாயாக!

## நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம்...

اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ السَّيِّدُ الْكَرِيْمُ
وَالرَّسُوْلُ الْعَظِيْمُ الرَّؤُوْفُ الرَّحِيْمُ اَلصَّلَاةُ
وَالسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ اَلصَّلَاةُ وَالسَّلَامُ
عَلَيْكَ يَا حَبِيْبَ اللهِ اَلصَّلَاةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا
خَيْرَ خَلْقِ اللهِ اَلصَّلَاةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَامَنْ
أَرْسَلَهُ اللهُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ اَلصَّلَاةُ وَالسَّلَامُ عَلَيْكَ
يَا خَاتَمَ النَّبِيِّيْنَ اَنْتَ الْحَبِيْبُ يَا حَبِيْبَ اللهِ
اَشْهَدُ اَنَّكَ يَا رَسُوْلَ اللهِ قَدْ بَلَّغْتَ الرِّسَالَتَ

www.DheenHajService.com

وَاَدَّيْتَ الْاَمَانَةَ وَنَصَحْتَ الْاُمَّةَ وَجَاهَدْتَّ فِيْ
سَبِيْلِ اللهِ حَقَّ جِهَادِهٖ وَعَبَدْتَّ رَبَّكَ حَتّٰى يَأْتِيَكَ
الْيَقِيْنَ جَزَاكَ اللهُ تَعَالٰى عَنَّا وَعَنْ وَالِدَيْنَا وَعَنِ
الْاِسْلَامِ خَيْرَ الْجَزَآءِ اَلصَّلَاةُ وَالسَّلَامُ عَلَيْكَ يَا
سُلْطَانَ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ وَرَحْمَةُ اللهِ
وَبَرَكَاتُهُ.

நபியவர்களே, சங்கைகுரிய தலைவர் அவர்களே, மகத்துவம் மிக்க அல்லாஹ்வின் தூதரவர்களே, இரக்கமுள்ளவர்களே, அருளானவர்களே! தங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் அவனுடைய பரகத்துகளும் உண்டாகுவதாக! அல்லாஹ்வின் பிரிய நேசரவர்களே, தங்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகுவாதாக! அல்லாஹ்வின் படைப்புகளில் சிறந்தவரே!



www.DheenHajService.com

தங்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகுவாதாக! அகிலத்தாருக்கு அருட் கொடையாக அல்லாஹ் அனுப்பியவரே! தங்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகுவாதாக! நபிமார்களில் இறுதி யானவரே! தங்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் உண்டாகுவாதாக!

யா ரசூலல்லாஹ், தாங்கள் தூதுவத்தை (உம்மத்தினருக்கு) உறுதியாக எத்திவைத்துவிட்டீர் என்பதாகவும், அமானிதத்தை நிறைவேற்றினீர் என்பதாகவும், உம்மத்தினருக்கு உபதேசம் புரிந்தீர் என்பதாகவும், அல்லாஹ்வின் பாதையில் உண்மையான போரிடுதலாகப் போர் புரிந்தீர் என்பதாகவும், தங்களுக்கு மரணம் வரும் வரை தங்களின் ரப்பை வணங்கினீர் என்பதாகவும் நான் சாட்சி கூறுகிறேன்.

அல்லாஹுதஆலா எங்களின் சார்பாகவும் எங்களின் பெற்றோர்களின் சார்பாகவும், இஸ்லாத்தின் சார்பாகவும் தங்களுக்கு சிறந்த கூலியை தந்தருள்வானாக. நபிமார்கள் ரஸூல்மார்கள் அனைவருக்கும் சக்ரவர்த்தி யானவரே, தங்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும், அவனுடைய பரகத்துகளும் உண்டாகுவாதாக!

## அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு ஸலாம்...

اَلسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدِنَا اَبَا بَكْرِ الصِّدِّيْقِ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا خَلِيْفَةَ رَسُوْلِ اللهِ عَلَى التَّحْقِيْقِ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا صَاحِبَ رَسُوْلِ اللهِ ثَانِيَ اِثْنَيْنِ اِذْ

هُمَا فِي الْغَارِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا مَنْ اَنْفَقَ مَالَهُ كُلَّهُ

فِيْ حُبِّ اللهِ وَحُبِّ رَسُوْلِهٖ حَتّٰى تَخَلَّلَ بِالْعَبَاءِ رَضِيَ

اللهُ تَعَالٰى عَنْكَ وَاَرْضَاكَ اَحْسَنَ الرِّضَاءِ وَجَعَلَ

الْجَنَّةَ مَنْزِلَكَ وَمَسْكَنَكَ وَمَحَلَّكَ وَمَأْوَاكَ اَلسَّلَامُ

عَلَيْكَ يَا اَوَّلَ الْخُلَفَاءِ وَتَاجَ الْعُلَمَاءِ وَصِهْرَ النَّبِيِّ

مُصْطَفٰي وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

எங்களின் தலைவர் அபூபக்கர் ஸித்தீக் (ரளி) அவர்களே! தங்கள் மீது ஸலாம் உண்டாவதாக.



www.DheenHajService.com

உறுதியான முறையில் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பிரதிநிதியவர்களே! தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! இருவர் குகையில் இருந்த போது இருவரில் இரண்டாவதாக இருந்த ரஸூல் (ஸல்) அவர்களின் தோழரவர்களே! தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! அல்லாஹுதஆலா தங்களை பொருந்திக் கொள்வானாக! மிக அழகிய பொருந்திக் கொள்வதாக தங்களை பொருந்திக் கொள்வானாக! சொர்கத்தைத் தங்களின் தங்குமிடமாக குடியிருக்குமிடமாக, இறங்கு மிடமாக, ஒதுங்குமிட மாக ஆக்கிவிடுவானாக! முதல் கலீபா அவர்களே! ஆலிம்களின் கிரீடமானவர்களே! நபி (ஸல்) அவர்களின் மாமனார் அவர்களே! தங்களின் மீது அல்லாஹ்வின் ஸலாமும் அவனுடைய ரஹ்மத்தும் பரக்கத்துகளும் உண்டாவதாக!

## உமர் (ரலி) அவர்களுக்கு ஸலாம்...

اَلسَّلَامُ عَلَيْكَ يَا عُمَرَ بْنَ الْخَطَّابِ اَلسَّلَامُ عَلَيْكَ

يَا نَاطِقًا بِالْعَدْلِ وَالصَّوَابِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا

www.DheenHajService.com

حَنَفِيَّ الْمِحْرَابِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا مُظْهِرَ دِيْنِ

الْاِسْلَامِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا مُكَسِّرَ الْاَصْنَامِ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا اَبَا الْفُقَرَآءِ وَالضُّعَفَآءِ

وَالْاَرَامِلِ وَالْاَيْتَامِ اَنْتَ الَّذِيْ قَالَ فِيْ حَقِّكَ سَيِّدُ

الْبَشَرِ لَوْ كَانَ بَعْدِيْ نَبِيٌّ لَكَانَ عُمَرَ بْنَ الْخَطَّابِ

رَضِيَ اللهُ تَعَالٰى عَنْكَ وَاَرْضَاكَ اَحْسَنَ الرِّضَاءِ

وَجَعَلَ الْجَنَّةَ مَنْزِلَكَ وَمَسْكَنَكَ وَمَحَلَّكَ وَمَأْوَاكَ

اَلسَّلَامُ عَلَيْكَ يَا ثَانِيَ الْخُلَفَاءِ وَتَاجَ الْعُلَمَاءِ

وَصِهْرَ النَّبِيِّ مُصْطَفٰي وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

உமருப்னுல் கத்தாப் (ரலி) அவர்களே! தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! நீதியாக, நேர்மையாக பேசுபவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக!

www.DheenHajService.com

மிஹ்ராபை அலங்கரித்தவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! தீனுல் இஸ்லாத்தை வெளியாகியவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! சிலைகளை உடைத்தெறிந்தவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! ஏழைகளுக்கும், பலவீனருக்கும், விதவைகளுக் கும், அனாதைகளுக்கும் தந்தையாய் இருந்தவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! தங்களுடைய விஷயத்தில் தான் நபி (ஸல்) அவர்கள் “எனக்குப் பின்னால் நபி இருந்தால் அவர் உமருப்னுல் கத்தாபாக இருப்பார்”. எனக் கூறியுள்ளார்கள்.

அல்லாஹுதஆலா தங்களை பொருந்திக் கொள்வானாக! மிக அழகிய பொருந்திக் கொள்வதாக தங்களை பொருந்திக் கொள்வானாக! சொர்கத்தைத் தங்களின் தங்குமிடமாக, குடியிருக்குமிடமாக, இறங்குமிடமாக, ஒதுங்குமிட மாக ஆக்கிவிடுவானாக! இரண்டாம் கலீபா அவர்களே, ஆலிம்களின் கிரீடமானவர்களே, நபி (ஸல்) அவர்களின் மாமனார் அவர்களே, தங்களின் மீது அல்லாஹ்வின் ஸலாமும் அவனுடைய ரஹ்மத்தும் பரக்கத்துகளும் உண்டாவதாக!

## பிறருடைய ஸலாமை நபி (ஸல்) அவர்களுக்கு எத்திவைத்தல்...

اَلسَّلَامُ عَلَيْكَ يَا رَسُوْلَ اللهِ مِنْ جَمِيْعِ اَوْصَانِيْ
بِالسَّلَامِ عَلَيْكَ

யாரஸூலுல்லாஹ், தங்களுக்கு ஸலாம் கூற என்னிடம் வஸிய்யத்துச் செய்த அனைவரின் சார்பாகவும் தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக

## ரவ்ளாவில் துஆ...

اَللّٰهُمَّ لَا تَدَعْ لَنَا فِيْ مَقَامِنَا هٰذَا الشَّرِيْفِ بَيْنَ
يَدَيَّ سَيِّدِنَا رَسُولِ اللهِ صَلَّي اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمْ ذَنْبًا
إِلاَّ غَفَرْتَهُ وَلاَ هَمًّا إِلاَّ فَرَّجْتَهُ وَلَا عَيْبًا إِلَّا سَتَرْتَهُ
وَلَا مَرِيْضًا إِلَّا شَفَيْتَهُ وَعَافِيَتَهُ وَلَا مُسَافِرًا إِلَّا
نَجَّيْتَهُ وَلَا غَائِبًا إِلَّا رَدَدْتَّهُ وَلَا عَدُوًّا إِلَّا خَذَلْتَهُ
وَدَمَّرْتَهُ وَلَا فَقِيْرًا إِلَّا اَغْنَيْتَهُ وَلَاحَاجَةً مِنْ

www.DheenHajService.com

حَوَائِجِ الدُّنْيَا وَالْآخِرَةِ وَلَنَا فِيْهَا صَلَاحٌ إِلاَّ

قَضَيْتَهَا وَيَسَّرْتَهَا يَا أَرْحَمَ الرَّاحِمِيْنَ.اَللّٰهُمَّ

اقْضِ حَوَائِجَنَا وَيَسِّرْ أُمُوْرَنَا وَاشْرَحْ صُدُوْرَنَا

وَتَقَبَّلْ زِيَارَتَنَا وَآمِنْ خَوْفَنَا وَاسْتُرْ عُيُوْبَنَا

وَاغْفِرْ ذُنُوْبَنَا وَاكْشِفْ كُرُوْبَنَا وَاخْتِمْ

بِالصَّالِحَاتِ أَعْمَالَنَا وَرُدَّ غُرْبَتَنَا اِلٰى اَهْلِنَا

وَاَوْلَادِنَا سَالِمِيْنَ غَانِمِيْنَ مُسْتَبْشِرِيْنَ وَاجْعَلْنَا

مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ مِنَ الَّذِيْنِ لَاخَوْفٌ عَلَيْهِمْ

وَلَاهُمْ يَحْزَنُوْنَ. بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ يَا

رَبَّ الْعَالَمِيْنَ.

www.DheenHajService.com

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முன்னிலையில் சிறப்புமிக்க எங்களின் இவ்விடத்தில் எங்களுக்கு எந்த பாவத்தையும் நீ மன்னிக்காமல், எந்த கவலையையும் நீக்காமல், எந்தக் குறையையும் மறைக்காமல், எந்த நோயாளிக்கும் நீ சுகமளிக்காமல், குணப்படுத் தாமல், எந்த பிரயாணியையும் நீ காப்பாற்றாமல், மறைந்த (காணாமல் போன) எதனையும் திருப்பித்தராமல், எந்த எதிரியையும் நீ கேவலப்படுத்தாமல், எந்த ஏழையையும் தேவையற்றவராக்காமல், இம்மை மறுமையின் தேவைகளில் எங்களுக்கு சாதகமான எந்தத் தேவையையும் நீ நிறைவேற்றாமல், அதனை எளிதாக்காமல் நீ விட்டுவிடாதே!

யா அல்லாஹ்! எங்கள் தேவைகளை நீ நிறைவேற்றி வைப்பாயாக! எங்கள் காரியங்களை இலேசாக்கி வைப்பாயாக! எங்கள் நெஞ்சங்களை விரிவடையச் செய்வாயாக! எங்கள் ஜியாரத்தை ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் பயத்தைப் போக்கி வைப்பாயாக! எங்கள் குறைகளை மறைத்திடு வாயாக! எங்கள் பாவங்களை மன்னித்திடுவாயாக! எங்கள் சிரமங்களை நீக்கிடுவாயாக! எங்களுடைய

www.DheenHajService.com

செயல்களை நல்லவையாக முடிவாக்கித் தந்திடுவாயாக!

நாங்கள் சுகமுடையவர்களாக, இலாபமடைந்த வர்களாக, பாவங்கள் மறைக்கப்பட்டவர்களாக இருக்கும் நிலையில் எங்களின் தனிமை பயணத்தை எங்களுடைய மக்களின் பக்கமும் நீ திருப்பிவிடுவாயாக! எங்களை உன்னுடைய நல்லடியார்களில் உள்ளவர்களாக, எவர்களின் மீது பயமில்லையோ, எவர்கள் கவலைப்பட மாட்டார்களோ, அத்தகையோரில் உள்ளவர்களாக எங்களை ஆக்கியருள்வாயாக! கிருபையாளர் களிலெல்லாம் மாபெரும் கிருபையாளனே! சர்வ உலகத்தினரையும் இரட்சித்துக் காப்பாற்றிப் பரிபாலிப்பவனே!

## ஜன்னத்துல் பக்கீஇல் நுழையும் போது...

اَلسَّلامُ عَلَيْكُمْ يا دَارَ قَوْمِ الْمُؤْمِنِينَ وَأَتَاكُمْ مَا تُوعَدُونَ غَدًا مُؤَجَّلُوْنَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْنَ اَللّٰهُمَّ اغْفِرْ لِأَهْلِ بَقِيعِ الْغَرْقَدِ

www.DheenHalService.com

முஃமின்களின் வீட்டுடையவர்களே, உங்களின் மீது சாந்தி உண்டாவதாக! நீங்கள் வாக்களிக்கப் பட்டது உங்களுக்கு வந்து விட்டது. நாளை மறுமை வரை நீங்கள் தவணை கொடுக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். நிச்சயமாக நாங்களும் இன்ஷா அல்லாஹ் உங்களுடன் வந்து சேருகின்றவர் கள்தாம். யா அல்லாஹ்! இந்த பகீஃவாசிகளுக்கு நீ மன்னிப்பை அருள்வாயாக

**ஜன்னத்துல் பக்கீஇல் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஸலாம்...**

اَلسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدِنَا عُثْمَانِ بْنُ عَفَّانِ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا مَنْ اِسْتَحَتْ مِنْكَ مَلَائِكَةُ
الرَّحْمٰنِ اَلسَّلَامُ عَلَيْكَ يَا مَنْ زَيَّنَ الْقُرْآنَ
بِتِلَاوَتِهِ وَنَوَّرَ الْمِحْرَابَ بِاِمَامَتِهِ وَسِرَاجُ اللّٰهِ
تَعَالٰى فِي الْجَنَّةِ، اَلسَّلَامُ عَلَيْكَ يَا ثَالِثَ الْخُلَفَاءِ
الرَّاشِدِيْنَ رَضِيَ اللّٰهُ تَعَالٰى عَنْكَ وَاَرْضَاكَ اَحْسَنَ

www.DheenHajService.com

الرِّضَاءِ وَجَعَلَ الْجَنَّةَ مَنْزِلَكَ وَمَسْكَنَكَ وَمَحَلَّكَ
وَمَأْوَاكَ اَلسَّلَامُ عَلَيْكَ يَا ثَالِثَ الْخُلَفَآءِ وَتَاجَ
الْعُلَمَآءِ وَصِهْرَ النَّبِيِّ مُصْطَفٰى وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

எங்கள் தலைவர் உஸ்மான் (ரலி) அவர்களே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! அல்லாஹ்வின் மலக்குகளும் வெட்கங்கொள்ளும் நாணம் உடையவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! தம்முடைய ஓதலால் திருக் குர்ஆனை அழகுபடுத்தியவரே! தம்முடைய தலைமை தனத்தால் மிஹ்ராபை ஒளிமய மாக்கியவரே! சொர்கத்தில் அல்லாஹ்வின் ஒளிவிளக்காய் இருப்பவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! நேர்வழி நின்ற கலீபாக்களில் மூன்றாமவரே, தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! அல்லாஹுதஆலா தங்களை பொருந்திக் கொள்வானாக! மிக அழகிய பொருந்திக் கொள்வதாக தங்களை பொருந்திக் கொள்வானாக! சொர்கத்தைத் தங்களின் தங்குமிடமாக குடியிருக்குமிடமாக, இறங்கு மிடமாக, ஒதுங்குமிடமாக ஆக்கிவிடுவானாக!

www.DheenHajService.com

மூன்றாம் கலீபா அவர்களே! ஆலிம்களின் கிரீடமானவர்களே! நபி (ஸல்) அவர்களின் மாமனார் அவர்களே, தங்களின் மீது அல்லாஹ்வின் ஸலாமும் அவனுடைய ரஹ்மத்தும் பரக்கத்துகளும் உண்டாவதாக.

## ஜன்னதுல் பகீஇல் துஆ

**ஜன்னத்துல் பகீஇல் அடங்கப் பெற்றிருக்கும் ஸஹாபாக்கள், இமாம்கள் மற்றும் நல்லடியார்கள் அனைவருக்கும் குர்ஆன் அல்லது யாஸீன் ஓதி ஹதியா செய்ய வேண்டும்.**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ عَلَيْهِ اَللّٰهُمَّ أَوْصِلْ ثَوَابَ مَا قَرَأْنَاهُ مِنْ كَلَامِكَ الْعَزِيْزِ هٰذِه هَدِيَّةً وَّاصِلَةً وَرَحْمَةً نَازِلَةً وَبَرَكَةً شَامِلَةً وَتُحْفَةً كَامِلَةً مِنْكَ اِلٰي

رُوْحِ سَيِّدِنَا وَنَبِيِّنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

خَاصَّةً ثُمَّ اِلَي اَرْوَاحِ جَمِيْعَ الْمُسْلِمِيْنَ عَامَّةً ثُمَّ اِلٰى

رُوْحِ مَنْ تَلَوْنَا الْقُرْآنَ الْعَظِيْمَ لِاَجَلِهِمْ

وَاغْفِرْلَهُمْ وَارْحَمْهُمْ وَاٰنَسَ اللهُ وَحْشَتَهُمْ

وَرَحِمَ اللهُ غُرْبَتَهُمْ وَنَوَّرَ اللهُ ضَرَائِحَهُمْ وَتَقَبَّلَ

اللهُ مِنْ حَسَنَاتِهِمْ وَتَجَاوَزَ اللهُ عَنْ سَيِّئَاتِهِمْ

وَغَفَرَ اللهُ ذُنُوْبَهُمْ وَجَمَعَ اللهُ بَيْنَنَا وَبَيْنَهُمْ فِيْ

جَنَّاتِ النَّعِيْمِ اَللّٰهُمَّ اجْعَلْ قُبُوْرَهُمْ رَوْضَةً مِنْ

رِيَاضِ الْجَنَّةِ وَلَا تَجْعَلْ قُبُوْرَهُمْ حُفْرَةً مِنْ حُفَرِ

النِّيْرَانِ وَصَلَّى اللهُ تَعَالٰى وَسَلَّمَ عَلٰي سَيِّدِنَا مُحَمَّدٍ

www.DheenHajService.com

وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ

عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ

الْعَالَمِيْنَ

அல்லாஹும்ம சல்லிஅலா சய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலி சய்யிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி

யா அல்லாஹ்! உன்னுடைய கண்ணியமான திருவசனங்களிலிருந்து நாங்கள் ஓதியதின் நன்மையை - சேர்ந்திடும் அன்பளிப்பாக, இறங்கிடும் ரஹ்மத்தாக, பொழிந்திடும் பரகத்தாக, பரிபூரணமான காணிக்கையாக - உன் புறத்திலிருந்து குறிப்பாக எங்கள் தலைவர் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் புனித உயிருக்குச் சேர்த்து வைத்திடுவாயாக. பிறகு பொதுவாக முஸ்லிம்கள் அனைவருடைய உயிர்களுக்கும் இதன் நன்மையை சேர்த்து வைத்திடுவாயாக. பின்னர் யாருக்காக நாங்கள் குர்ஆனை ஓதினோமோ அவருடைய உயிருக்கு நன்மையைச் சேர்த்து

www.DheenHaService.com

வைத்திடுவாயாக. அவர்கள் அனைவரையும் மன்னித்து அவர்களுக்கு அருள்புரிவாயாக. அல்லாஹு தஆலா அவர்களுடைய கப்ரின் வெருட்சியை மகிழ்ச்சியாக்கி வைத்திடுவானாக. அவர்களின் தனிமைக்கு அருள் புரிவானாக. அவர்களுடைய அடக்கஸ்தலங்களை ஒளிமய மாக்கிவைப்பானாக. அவர்களுடைய நன்மைகளை ஏற்றுக் கொண்டு அவர்களின் பாவங்களை மன்னித்திடுவானாக. அல்லாஹு தஆலா அவர்களையும் நம்மையும் சொர்கத்தில் ஒன்று சேர்த்து வைத்திடுவானாக.

யா அல்லாஹ்! இவர்களுடைய கப்ருகளை சொர்கச் சோலைகளாக ஆக்கி வைத்திடுவாயாக. இவர்களின் கப்ருகளை நரகப் படுகுழியில் உள்ளவையாக ஆக்காதிருப்பாயாக.

வஸல்லல்லாஹு அலா கைரி கல்கிஹீ ஸய்யிதினா முஹம்மதின் வஆலிஹீ வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன். சுப்ஹான ரப்பிக ரப்பில் இஜ்ஜதி அம்மா யஸிபூன். வஸலாமுன் அலல் முர்ஸலீன். வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

www.DheenHajService.com

## ரவ்ளாவில் இறுதி துஆ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا

مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ عَلَيْهِ اَللّٰهُمَّ لَا تَجْعَلْ هٰذَا

آخِرَ الْعَهْدِ بِنَبِيِّكَ وَمَسْجِدِهٖ وَحَرَمِهٖ وَيَسِّرْ لِيَ

الْعَوْدَ اِلَيْهِ وَالْعُكُوْفَ لَدَيْهِ وَارْزُقْنِيَ الْعَفْوَ

وَالْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَرُدَّنَا اِلٰي اَهْلِنَا

سَالِمِيْنَ غَانِمِيْنَ آمِيْنَ. بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ

الرَّاحِمِيْنَ. اَلْوِدَاعُ يَارَسُوْلَ اللهِ اَلْفِرَاقُ يَانَبِيَّ اللهِ

لَا جَعَلَ اللهُ تَعَالٰى آخِرَ الْعَهْدِ لَا مِنْكَ وَلَا مِنْ

زِيَارَتِكَ وَلَا مِنَ الْوُقُوْفِ بَيْنَ يَدَيْكَ اِلَّا مِنْ خَيْرٍ

وَعَافِيَةٍ وَّصِحَّةٍ وَّسَلَامَةٍ اِنْ عِشْتُ اِنْ شَاءَ اللهُ



www.DheenHuService.com

تَعَالٰى جِئْتُكَ وَاِنْ مِتُّ فَاَوْدَوْتُ عِنْدَكَ شَهَادَتِيْ

وَاَمَانَتِيْ وَعَهْدِيْ وَمِيْثَاقِيْ مِنْ يَوْمِنَا هٰذَا اِلٰى يَوْمِ

الْقِيَامَةِ وَهِيَ شَهَادَةُ اَنْ لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ

لَاشَرِيْكَ لَهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ.

سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى

الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

அல்லாஹும்ம சல்லிஅலா சய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலி சய்யிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி

யா அல்லாஹ்! இந்த ஜியாரத்தை உன்னுடைய நபியவர்களின் அருகினில், அன்னாருடைய மஸ்ஜிதின் அருகினில், அன்னாருடைய ஹரம் அருகினில் கடைசிப் பயணமாக ஆக்கிவிடாதே. மீண்டும் நான் இங்கு திரும்பி வருவதற்கும் இவ்விடத்தில் தங்குவதற்கும் எனக்கு எளிதான வாய்ப்பை உண்டாக்கித் தந்திடுவாயாக.



www.DheenHajService.com

இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பையும் நற்சுகத்தையும் எனக்கு வழங்கிடுவாயாக. உன் பேரருளால் சுகமானவர்களாக நன்மைகளை கொள்ளை கொண்டவர்களாக, அச்சமற்றவர்களாக எங்கள் குடும்பத்தினர் பால் எங்களை நீ திரும்பிச் செல்லச் செய்வாயாக! அருளாளர்களிலெல்லாம் மாபெரும் அருளாளனே.

நான் பயணப்படுகிறேன் யாரசூலல்லாஹ்! பிரிந்து செல்கிறேன் யா நபிய்யல்லாஹ்! தங்களின் ஜியாரத்தை, தங்களின் முன்னிலையில் தங்குவதை கடைசி முறையாக அல்லாஹ் ஆக்காதிருப்பானாக. அவ்வாறு ஆக்கினால் நன்மை, சுகம், உடல் நலம், சாந்தி ஆகியவற்றிலிருந்து தந்தருள்வானாக! இன்ஷா அல்லாஹ் நான் ஜீவித்திருந்தால் மீண்டும் தங்களிடம் வருகிறேன். நான் இறந்துவிட்டால் எங்களுடைய இந்த நாளிலிருந்து கியாமத் நாள் வரை என் சாட்சியை, என் அமானிதத்தை, என் உடன்படிக்கையை தங்களிடம் ஒப்படைக்கிறேன். அது "அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு" என்ற சாட்சியாகும். சுப்ஹான ரப்பிக ரப்பில் இஜ்ஜதி அம்மா யஸிபூன். வஸலாமுன் அலல் முர்ஸலீன். வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

# சலவாத்துகள்

**மஸ்ஜிதுன் நபவியில் ரவ்ளா அருகிலிருந்து சலவாத்துகளை அதிகமாக ஓதுவது மிகச் சிறந்ததாகும். ஹதீஸில் கூறப்பட்டுள்ள சில சலவாத்துகள் இங்கு எழுதப்படுகின்றன.**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ إِبْرَاهِيْمَ
إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ. اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ
وَعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى إِبْرَاهِيْمَ
وَعَلٰى اٰلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

யா அல்லாஹ்! நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மீதும், அவர்களுடைய குடும்பத்தினர் மீதும் நீ ஸலவாத்து அருளியது போல், எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் குடும்பத்தினர்

www.DheenHajService.c

மீதும் நீ சலவாத்தினை அருள்வாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மேன்மைக்குரியவன்.

யா அல்லாஹ் நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மீதும், அவர்களுடைய குடும்பத்தினர் மீதும் நீ பரகத்துச் செய்தது போல், எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீதும் அன்னாரின் குடும்பத்தினர் மீதும் நீ பரகத்துச் செய்திடுவாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவன்; மேன்மைக்குரியவன்.

اَللّٰهُمَّ اَنْزِلْهُ مَقْعَدَ الْمُقَرَّبَ عِنْدَكَ يَوْمَ الْقِيَامَةِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَبْدِكَ وَنَبِيِّكَ وَرَسُوْلِكَ

النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ. اَللّٰهُمَّ صَلِّ

عَلٰى مُحَمَّدٍ حَتّٰى تَرْضٰى وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ بَعْدَ

الرِّضَا وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ اَبَدًا اَبَدًا اَللّٰهُمَّ صَلِّ عَلٰى

مُحَمَّدٍ عَدَدَ خَلْقِهٖ وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ رِضَاكَ نَفْسِكَ

www.DheenHajService.com

وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ زِنَةَ عَرْشِكَ وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ

مِدَادَ كَلِمَاتِ الَّتِيْ لَا تَنْفَدُ. اَللّٰهُمَّ وَصَلِّ عَلٰى سَيِّدِنَا

مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ صَلَاةً تَكُوْنُ لَكَ رِضًا وَلِحَقِّهِ

أَدَاءً وَأَعْطِهِ الْوَسِيْلَةَ وَالْمَقَامَ الْمَحْمُوْدَ الَّذِيْ

وَعَدْتَّهُ وَاَجْزِهِ عَنَّا مَا هُوَ أَهْلُهُ وَاَجْزِهِ عَنَّا أَفْضَلَ مَا

جَزَيْتَ نَبِيًّا عَنْ أُمَّتِهِ وَصَلِّ عَلٰى جَمِيْعِ إِخْوَانِهِ مِنَ

النَّبِيِّيْنَ وَالصَّالِحِيْنَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ.

## மஸ்ஜிதுன் நபவியை விட்டு வெளியேறும் போது...

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ فَضْلِكَ

யா அல்லாஹ்! என் பாவங்களை எனக்கு மன்னித்து உன்னுடைய கருணை வாசல்களை எனக்கு நீ திறந்து விடுவாயாக.

www.DheenHajService.com

## ஹஜ்ரத் ஹம்ஜா (ரலி) மற்றும் உஹது ஷுஹதாக்கள் ஆகியோருக்கு ஸலாம்...

اَلسَّلَامُ عَلَيْكَ يَا سَيِّدِنَا حَمْزَةِ بْنُ عَبْدُ الْمُطَّلِبْ
اَلسَّلَامُ عَلَيْكَ يَا عَمَّ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمْ اَلسَّلَامُ عَلَيْكَ يَا عَمَّ حَبِيْبِ اللهِ اَلسَّلَامُ
عَلَيْكَ يَا اَسَدُ اللهِ وَاَسَدُ رَسُوْلِهِ اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا
شُهَدَآءَ يَا سُعَدَآءَ اَلسَّلَامُ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ
فَنِعْمَ عُقْبَى الدَّارِ اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا شُهَدَآءَ
اُحُدٍ كَآفَّةً عَامَّةً وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ

எங்களின் தலைவர் ஹம்ஜா (ரலி) அவர்களே! ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அவர்களே! ஷுஹதாக்களின் தலைவரவர்களே, அல்லாஹ்வின் சிங்கமே! அவன் தூதரின் சிங்கமே! தங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! மற்றும்



www.DheenHajService.com

ஷுஹதாக்களே, நற்பாக்கியம் பெற்றவர்களே, நீங்கள் பொறுமை கொண்ட காரணத்தால் உங்களின் மீது ஸலாம் உண்டாவதாக! மறுமை வீடு உங்களுக்கு மிக நல்லதாகி விட்டது. உஹதின் ஷுஹதாக்களே, உங்கள் அனைவரின் மீதும் ஸலாமும் அல்லாஹ்வின் அருளும் பரகத்துகளும் உண்டாவதாக!

www.DheenHajService.com